வார இதழ்
மு. கருணாநிதி
2 அணா

புரசு 2 | சென்னை | 4—11—55 | வெள்ளி | ஒலி 32

குறளோவியம்

கருணு

• "நகை தந்தார் — நகை தந்தேன். தொட்டார்—சுட்டேன். தழுவினர்—நழுவினேன். தொடர்ந்தார் — படர்ந்தேன். பிரிந்தார்—இருக்கிறேன்"

வேதனையை விழிமூலம் விளக்கி நிற்கிருள் அவள். இன்னெருத்தியோ இடுப்பொடியாமல் இருப்பதற்காகத் தோழியின் தோளைப் பிடித்துக் கொண்டிருக்கிருள். உயிரைக் காவடித் தண்டாகக் கொண்டு காமநோயும், நாணமும் இரு பக்கமும் தொங்குகின்றன; நான் என் செய்வேன்?— என்று துவளுகிருள் அந்தத் தோகை.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து.

அவள் குமுறலை உணர்த்துகிறது இந்தக் குறள். இருவர் நிலைதான் இது வென்ருல், எந்தன் நிலையோ அதைவிட மோசம்-என்று மழைக் கண்களைக் காட்டுகிருள் மற்றெருத்தி.

காதலன் விடைபெற்றபோது அவன் கூறிய வார்த்தை என்ன தெரியுமா? 'நீ போகவில்லையென்ருல் என்னிடம் சொல்! போய்த் திரும்புகிறேன் என்று சொல்வதானுல், நீ திரும்பும் வரையில் உயிரோடு இருப்பவரிடம் விடை பெற்றுப் போ!"

இப்படிச் சொல்லிக் காதலனைத் திணற அடித்தவள் அவள். பாவம்; அவளால் காம நோயைப் பிறர் அறியாமல் மறைக்கவும் முடியவில்லை; அந்த நோய் தந்த காதலனிடம், நோயின் கடுமை பற்றி விவரிக்கவும் வெட்கமாயிருக்கிறது. இப்படித் திண்டாடுகிருள், அந்த வண்டாடும் மலர்க் குழலாள்.

கரத்தலும் ஆற்றேன் இந்நோயை நோய்செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

உடலிற் பூசிய சந்தனத்தின் ஈரம் காய்வதற்குள் அவசரப் பட்டார்; பாடச் சொன்னுர்; உடனே இதழ் மூடச் சொன்னுர்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

தீமைபுரிந்த 'திருமூர்த்திகள்'!

அன்புள்ள குமார்,

பொது மேடையிலே கட்சிப் பூசல்கள் பல இருக்கலாம். ஆனல் அரசாங்கம் எல்லோருக்கும் பொது! கதருடை அணிந்தோனுக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ, அவ்வளவு உரிமை வேற்றுடை அணிந்தோனுக்கும் உண்டு!

அதுபோலவேதான் அரசாங்கம் அமைக்கும் கமிட்டிகளும், கமிஷன்களும்! அவைகளுக்கு உயிர் அளிக்கப்பட்டு, இட்ட கடமையை மேற்கொண்டுவிட்டால் நீதிபதிகளின் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. துலாக்கோல் நிலையிலேயிருந்து, எந்த சார்புடையவரையும் சாய்த்துவிடும் நோக்கத்தைக் கனவிலும் கருதாமல், பிரச்னைக்கு முடிவு காணவேண்டும்.

அப்போதுதான் வாய் வலிக்கப் பேசும் ஜனநாயகம் முது கெலும்பு பெற்று வீரநடை போட முடியும்.

ஆனல், பரத கண்டத்தில் நடப்பது என்ன?

ஜனநாயகம்என்ற வார்த்தை பண்டிதரின் பல்வரிசையைக் கடந்து, ஒலிபெருக்கியுள் நுழைந்து வெளிவராத நாளே கிடையாது.

அவர் இல்லாவிட்டால் ஜனநாயகமே நசித்து விடுமென்று பேசுகிருர்கள். ஆனல் குடியரசுக் கோட்பாடு என்னும் அந்த உயர்தர சொல்லோவியம் உயிர் பெற்று எழவில்லையே, குமார்!

மாநில சீரமைப்புக் கமிஷன் எத்தகைய மகத்தான லட்சியத்துக்காக அமைக்கப் பட்டது என்பது பற்றி அவர்களே கூறக் கேட்டிருக்கிருய்.

பசுல் அலி—என்னும் அதன் தலைவர் நீதி வழுவா நெறிமுறை உணர்ந்தவர்; கரையிலே மோதிவிழும் கடல் நீரின் நுரை போன்ற தூய்மை கொண்டவர்; வேண்டியோர்—வேண்டாதார் எனும் பேத எண்ணத்தை பிணமாக்கிக் கொண்டவர்; என்றெல்லாம் அவர் பெருமை பறைசாற்றப் பட்டது. பாட்ன கோர்ட்டிலே பத்தரை மாற்றுத் தங்கமெனப் புகழ் பெற்றவராயிற்றே அவர் — என்றும் இடை மரித்தார்கள்!

கமிஷன் அங்கத்தினருள் ஒருவரான கே. எம். பணிக்கரைப் பற்றியும் அப்படித்தான் புகழ்ந்தார்கள். சீனத்திலே சென்று வினவுங்கள், அந்தச் செம்மலின் சுத்தமான உள்ளத்தைப் பற்றி-என்று நம்மையே திருப்பிக் கேட்டார்கள்.

பண்டித குன்ஸ்ரு—கமிஷனின் மூன்ருவது கனவான்! இந்திய ஊழியர் சங்கம் தந்த உத்தமர்-என்ருர்கள், அவரை!

தபால் தலையிலே இருக்கும் மும்மூர்த்திகளைப் போல இந்த மும்மூர்த்திகளையும் படைத்து, அவர்கள் கையிலே இந்திய உப கண்டத்து மண்ணுக்குப் புதிய கோடு போடும் உத்யோகத்தையும் கொடுத்தார்கள்.

மூவரும் பெருந்தலைகள். நீ நினைப்பாய், குமார், அவர்கள் எல்லோரும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ மொழிவழி மாகாணங்களைக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர்; இந்த நாட்டு மக்கள் மொழியின் அடிப்படையிலே ஆளத் துடிக்கும் இந்த நேரத்தில். அத்தகைய மாறுபட்ட நோக்கம் கொண்டோரிடம் இத்தகைய மகத்தான பணியைத் தரலாமா?—என்றுதான் எழுதப் போகிறேன், என்று! நான்அதை இப்போது சொல்ல விரும்பவில்லை, குமார்! அந்த விவேகமற்ற செயலின் பலனைத் தான் அரசாங்கம் இப்போது அனுபவித்துவருகிறது. எங்கும் நிலவும் குழப்பமும், அதிருப்தியும் மொழிவழிக் கொள்கையைக் காலிலே போட்டு மிதித்த அந்தக் கனவான்களின் செயலால் வந்தது தானே!

அது கிடக்கட்டும். நான் உனக்குச் சொல்லப் போவது அந்தக் கமிஷனின் ஓரவஞ்சகத்தைப் பற்றித்தான்!

நடுநிலைமையின் நாயகமாய் விளங்க வேண்டியவர்கள் நய வஞ்சகம் புரிந்திருக்கிருர்கள்!

கண்ணியத்தின் காவலர்கள் கழுத்தறுப்பு வேலையில் ஈடு பட்டிருக்கிருர்கள்!

பொதுமக்கள் மண்ணிலே மண்; கதர் அணிந்தோன் கண்ணுக்கு விருந்து!

அடுக்குமா இந்த அநீதி? 'இந்த மாதிரி ஏற்பாடுகள் செய்திருக்கிருேம்; இப்படியிப்படி செய்யப் போகிருேம்'—என்று முன்கூட்டியே எடுத்து இயம்பலாமா ஏற்றமிகு கடமையைக் காவல் புரிய வேண்டிய 'திருமூர்த்திகள்'?

ஆடுமாடுகள் வாய்வைக்காத வகையிலேதான் பாதுகாக்கச்

ஆமாம், குமார்! பம்பாய் மாநிலத்தின் ரெவின்யூ அமைச்சரான ஹிரே என்பார் பூனு நகரிலே வெளியிட்ட கருத்துக்கள் மாநில புணரமைப்புக் கமிஷனை ஒரு கண்ணியம் துறந்த கும்பலாகவே காட்டிக் கொடுத்து விடுகிறது!

ஹிரே மராட்டிய மொழி பேசுவோருக்கு தனி மாநிலம் வேண்டுமென்ற கொள்கை உடையவர்!

அவர் சில நாட்களுக்கு முன்னர் கமிஷன் அங்கத்தினர் ஒருவரைச் சந்தித்தாராம். அந்தக் குறிப்பிட்ட அங்கத்தினர் மேலும் இருவருடைய முன்னிலையில், கமிஷன் பின்னல் சமர்ப்பித்த அறிக்கையின் ஒரு பகுதியைப் படித்துக் காட்டினராம். அப்போது அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருந்த சம்யுக்த மகாராஷ்டிர மாநிலம், இப்போது காணுமே; அது ஏன் என்று கேட்கிருர், ஹிரே!

கமிஷன் அறிக்கை கடைசி வரை யாருக்கும் தெரியாத விதத்தில் பரம ரகசியமாக இருக்கும் என்று பறை சாற்றினர்கள்!

யாருடைய விருப்பையும், வெறுப்பையும் பூர்த்தி செய்வதாக அந்த அறிக்கை அமையாது என்று உறுதி கூறினர்கள்.

ஆனல் பம்பாய் அமைச்சரோ அந்த முகமூடியைக் கிழித் தெறிகிருர்!

பாட்ன கோர்ட் தந்த பொக்கிஷமாம் பசுல் அலி; பழுது சிறிதுமில்லா பணிக்கர்; குணக் குன்று குன்ஸ்ரு!—இந்த மூவருமே உடந்தையாக இருந்து, 'சிதம்பர ரகசியம்' போலிருந்த அறிக்கையை ஒரு ஹிரேயுக்கு, அவர் காங்கிரஸ் அமைச்சர் என்கிற காரணத்தால் திறந்து காட்டியிருக்கிருர்கள்!

சொன்னேம் அந்த வேலியை; அது ஆடு மாடுகளை அனுமதித்ததுமல்லாமல்,தானும் மேய்ந்த கதையாக அல்லவா இது இருக்கிறது!

ஹிரே—ஒரு மாநிலத்தின் சாதாரண அமைச்சர்; நம்முடைய ஷெட்டியைப் போல கிணற்றுக் குள்ளேயே வாழ்ந்து பழக்கப்பட்டவர்!

அந்தச் சிறு ஆட்டுக்குட்டிக்கே இந்தத் திருமூர்த்திகள் திறந்துவிட்டிருந்தால், மீதமுள்ள பெரிய புள்ளிகளுக்கு இவர்கள் என்ன செய்திருக்க மாட்டார்கள்?

சேட்டுகளின் வியாபாரத்திற்காக எல்லையை மாற்றியிருப்பார்கள்; மாகாணம் சிறியதானல் அதிகாரம்அதிகமாகும்; தட்டிக் கேட்பவர்கள் தலையை துண்டித்துவிடலாம் — என்று நோக்கம் கொண்டவர்கள் சிரிப்பைக் காட்டியே இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருப்பார்கள்!

—இவையெல்லாம் நடந்திருக்காது என்ரு நினைக்கிருய்? நிச்சயம் நடந்திருக்கும். ஒரு ஹிரேயுக்குக் குனிந்து கொடுத்தோர்இன்னும்எத்தனை பேருக்கு விழுந்து நமஸ்காரம் செய்திருக்கிருர்களோ?

ஹிரேயின் வார்த்தைகளைக் கவனித்தால் அந்த விளக்கமும் கிடைத்துவிடும், குமார்!

"நான் அறிக்கையைப் படித்தபோது சம்யுக்த மகாராஷ்டிரம் பிரிய வேண்டியதின் அவசியம் பற்றி வற்புறுத்தப்பட்டிருந்தது. அது இப்போது இல்லையே; அந்த அத்தியாயம் இப்போது எங்கே போயிற்று?"

—இந்தத் தோரணையில் வினவுகிருர்,பம்பாய் ரெவின்யூ அமைச்சர்!

அவர் பார்க்கும் போதே இருந்த யோசனை, பிற்

✶ தொடர்ச்சி 10-ம் ப

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 4—11—55 வெள்ளி

புரோகித-பனியா ஏடுகளுக்கு!

நாட்டின் பெருமைக்கு வழிகோலுவதும், சிறுமை கண்டு சீறுவதும்தான் நல்ல பத்திரிகைகளின் கொள்கையாக இருக்க வேண்டுமென்று கூறுவார்கள். ஆனால், உரிமைக் கிளர்ச்சியைப் பார்த்து உறுமியவர்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, சுதந்திரமடைந்துவிட்ட அரசுக்குத் தகுந்தாற்போல் எங்கள் போக்கிலும் பொறுப்புணர்ச்சி கலந்துவிட்டது என்று தம்பட்டமடித்த இந்த நாட்டு தேசிய ஏடுகளோ, இன்னும் பழைய ஏகாதிபத்திய திசையிலேதான் போய்க் கொண்டிருப்பதை நாம் பார்த்து வருகிறோம்.

மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு மக்கள் மன்றத்திலே மதிப்பு தரும் நல்ல செய்திகளை இருட்டடிப்பு செய்வது; இரண்டுபட திரித்துக் கூறுவது; அவர்களுடைய கௌரவத்துக்கு இழுக்கு தரும் போலிச் செய்திகளுக்கு புதுமெருகுதந்து வாசகர்களின் கண்களுக்கு வலைவிரிப்பது—இவை போன்ற இழிதகை செயல்களை இம்மியளவும் வெட்கமின்றி செய்வதற்கு இன்று தேசிய ஏடுகள் யாவும் போட்டியிட்டுக் கொண்டு முன் வந்திருக்கின்றன.

போர்க் காலத்திலே இட்லரின் இருகைகளுள் ஒன்றாய் இருந்த கோயபல்ஸ் பொய் பிரசாரம் செய்வதிலே கடைப்பிடித்த கோணல் வழிகளைப் பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் அவைகளையும் மிஞ்சக்கூடிய வகையில் இந்த நாட்டு ஆரிய-வடக்கத்திய கூட்டமைப்பின் ஏடுகள் உலவ முயலும்போதுதான் ஜனநாயகத்தின் நலன் கருதி நாம் வருந்த வேண்டியவர்களாகிறோம்.

அந்த 'கோயபல்ஸ்' ஏடுகள் சமீபத்தில் முடிவுபெற்ற நகர சபைத் தேர்தலின்போது நடந்துகொண்ட தன்மையே அவைகளின் குள்ளநரிக் கொள்கையை விளக்குவதாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் வருகின்ற பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளுமோ என்னும் கிலேநடுக்கம் அவைகளை இந்த நகர சபைத் தேர்தல் முடிவுகள் சிலவற்றை இருட்டடிப்பு செய்வதில் கொண்டு வந்து விட்டிருக்கின்றன. திருவண்ணாமலை, வேலூர், மன்னார்குடி—போன்ற பல ஊர்களிலே காங்கிரஸ் மண் கவ்வியிருக்கிறது. மோதிலால் மைந்தர் வந்து 'ஆள் பிடிப்பு'க்கு வழிகோலிச் சென்றபோதும்கூட, சில இடங்களில் மாடுகள் நகர சபை மன்றத்தினுள் நுழைய முடியாத பரிதாப நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தச் செய்திகளையெல்லாம் ஏதோ ஒரு மூலையில் வெளியிட்டு வயிற்றெரிச்சலை அடக்கிக் கொண்ட அந்த ஏடுகள், காங்கிரஸ் வெற்றி பெற்ற சில ஊர்களை மட்டும் கொட்டை எழுத்துக்களில் போட்டு கூத்தாடி மகிழ்ந்திருக்கின்றன.

வழியில் போகிறவர்களை மறைத்து அவர்கள் மடியிலிருந்து ஓரணாவைக் கொள்ளையடிக்கும் செயல் போல, கீழ்த்தரமான தலைப்புகளை உபயோகித்து வாசகர்களை மயக்கும் இந்த வடிகட்டிய வியாபாரத்தன்மை சில 'பெரிய புள்ளி'களையும் ஆக்ரமித்திருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. '*தினமணி*' 30-10-55 இதழிலும், 'சுதேசமித்திரன்' 31-10-55 இதழிலும், பம்பாய் தி. மு. கழகத் தோழர்களைப் பற்றி வந்த தவறான செய்திகளைத்தான் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

தாராவி ஜவகர் சங்க ஆண்டு விழாவின்போது 'நாலாயிரம் தி. மு. க. தோழர்கள்; அனுதாபிகள் இனி காங்கிரசில் சேர்ந்து நாட்டின் பணிக்கு சேவை செய்வதாகக் கூட்டத்தில் சபதம் செய்தார்கள்'—என்று அந்த இரு ஏடுகளும் எடுப்பான தலைப்பு தந்து உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டிருந்தன.

சாதாரண சமயத்தில் அந்த ஏடுகளின் ஆசிரியர்களை அணுகி, 'பம்பாய் வாழும் தமிழர்களுள் எவ்வளவு பேர் தி. மு. க—வைச் சார்ந்தவர்கள்?' என்றுகேட்டால், 'ஏதோ சிலர் இருக்கிறார்கள்' என்றுதான் பதில் கிடைத்திருக்கும். ஆனால், காங்கிரசில் பெருகும் என்கிற நிலைமையில் 'பம்பாயில் நாலாயிரம் பேருக்குமேல் தி. மு. க. வில் இருக்கின்றனர்—என்பதை நம்மையறியாமலேயே ஒத்துக் கொண்டு விட்டோமே' — என்றுதான் அந்த பத்திரிகைகள் வருந்தும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் சார்பில் அறிக்கை விட்டிருக்கும் தோழர் த. மு. பொற்கோ கூறுவதைப் போல, 'பம்பாய் தி. மு. கழகத்தின் எந்தக் கிளையிலிருந்தும் இதுவரை ஒரு உறுப்பினர் கூட விலக வில்லையாம்'! அது தவிர "இச் செய்தியைக் கண்ட பம்பாய் வாழ் பொதுமக்கள், காங்கிரசின் சார்புடையோர் என விளம்பரப் படுத்திக் கொள்ளும் ஜவகர் வாலிபர் சங்கத்தினரின் கீழ்த்தரப் போக்கைக் கண்டு எள்ளி நகையாடுகின்றன"ராம்!

பச்சைப் பொய்களுக்கு உருவம் தந்து, 'கோயபல்ஸ் ஆயுத'த்தை வீசியாவது நம்மை அசைக்க முடியுமா—என்று பார்க்கிறார்கள், தாங்கள் கடைப்பிடிக்கும் வழிமுறை எத்தனை அற்பத்தனமானது என்பதை உணராதவர்கள்!

கருச் சிதைவைக்கூட சாதாரண குற்றமாகக் கருதி மன்னித்து விடலாம். ஆனால் 'செய்திச் சிதைவு' இருக்கிறதே, அதைச் செய்பவர்கள் ஜனநாயக நங்கையின் தாலியை அறுப்பதுபோன்ற இரக்கமற்ற செயலைப் புரிந்தவர்களாகிறார்கள். இந்த அறிவுரையைத்தான் அந்தப் புரோகித-பனியா ஏடுகளுக்கு உணர்த்த விரும்புகிறோம்! ❖

விரைவில்
ஆரம்பமாகிறது!
★
"வெள்ளிக்
கிழமை"
கருணாநிதி
எழுதும் புதிய தொடர்கதை!

திராவிடர் திருநாளல்ல; தீபாவளி!





அலை கடலையும், மலைத் தொடர்களையும் எல்லையாகக் கொண்ட இந்த நீள்வையகத்தில் அவன் ஒரு தனி மனிதன். அவனது நினைவு தெளியும் முன்பே, பெற்றோர்கள் அவனை விட்டுப் பிரிந்தனர். கருணை உள்ளம் படைத்த யாரோலோ வளர்க்கப்பட்டு, இரக்க சிந்தை குறையாத எவராலோ தாலாட்டப்பட்டு, அவன் வளர்ந்தான். "பரமண்டலத்திலிருக்கும் பரமபிதா"வின் போதனையைப் பரப்பும் பாதிரியார்கள் அவனைப் படிக்க வைத்தனர். பாதிரியார்கள் கல்வி முலாமில் மதபோதனை செய்தாலும்கூட, ஏழை எளியவர்கள் முன்னேற ஏணியாக உதவுகிறார்கள். இந்துமத போதகர்கள் மோட்ச லோகத்திற்கு வழி கூறுகிறார்களே தவிர, இவ் வையகத்தில் வாழ வழி கூறுவதில்லையே!

அவன் படித்து பட்டம் பெறவில்லையே தவிர, ஒரு அலுவலகத்தில் பணியாற்றும் அளவுக்கு தகுதி பெற்றான். "அப்பனே! உன் இறக்கைகள் வளர்ந்து விட்டன. வாழ்க்கை வானில் இனி நீ யார் உதவியின்றியும் பறக்கலாம். ஆகவே நீ உன் வாழ்வுக்கு ஒரு வழி தேடிக்கொள், மகனே!" என்று கூறிபாதிரியார்கள் அவனை அனுப்பி விட்டனர். அவனும் தனக்கு ஒரு வழி தேடி அலைந்தான்.

வேலையைத் தேடித் தேடி அலைந்து—பல படிக்கட்டுகளை ஏறி இறங்கி– ஏசலையும், பூசலையும் பரிசாகப் பெற்று— இறுதியில் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக சேர்ந்தான். இன்பமே தன் காலடியில் வந்து தஞ்சம் புகுந்ததாக அவன் நினைத்தான். "நூறுருபாய்! போதும்! வறுமை என்னை இனி வாட்டாது! இனி யாருடைய தயவும் தேவையில்லை"—என்று எண்ணினான்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. நமது நண்பனும் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால், அவன் இதயத்திலே ஒரு ஏக்கம்! உள்ளத்திலே வரண்ட உணர்ச்சி! கண்களிலே கவலையின் சாயல்! அவனது இதயத்திலே ஆசை துளிர்க்க ஆரம்பித்தது! பகட்டான வாழ்வும், பளிங்கு மாளிகையும் அல்ல அவன் விரும்பியது. ஆரம்பர வாழ்வும், அலங்கார வீடும் அல்ல அவன் வேண்டியது. தன் வரண்டுபோன வாழ்வுக்கு—இருண்டுபோன உள்ளத்துக்கு—ஒரு துணையை விரும்பினான். தனிமையின் ஏக்கத்தைப் போக்க ஒரு துணை—இன்பத்தையும், துன்பத்தையும் பங்கிட்டுக் கொள்ள ஒரு துணை—கலந்து உறவாட, எண்ணங்களை பரிமாறிக் கொள்ள ஒரு துணை—அதையே அவன் உள்ளம் நாடியது. கடற்கரையில் கைகோர்த்துக்கொண்டு காற்று வாங்கும் காதலர்களைக் காணும்போது அவன் இதயம் அழும்! படக்காட்சி சாலையிலே—நடைபாதையிலே—நடை பழகும் நாரீமணிகளைக் காணும் போதெல்லாம் அவன் உள்ளம் வேதனையால் வீங்கும். தனிமனிதனாககாலத்தைக் கடத்தும் தனக்கும் ஒரு தையல் கிடைக்கமாட்டாளா? இருண்ட இதயத்தில் ஒளியேற்ற ஒரு திருவிளக்கு கிடைக்காதா?—என ஏங்குவான். பகலெல்லாம் மாடென உழைத்து, மாலையில் களைத்து வீடு திரும்பும்போது, வாயிற்படியில் நின்று வரவேற்க—கனிமொழியால் கவலையைப் போக்க—அமுத இதழ்களால் சோகத்தைத் துடைக்க—ஒரு துடி இடையாளின் துணை தேவைப்பட்டது அவனுக்கு. பருவத்தின் பூரிப்பில் இருக்கும் அவனது இதயம் ஒரு இன்ப ராணியைத் தேடி அலைந்ததில் தவறு ஒன்றும் இல்லையே! ஒளியும், நிழலும் சேர்ந்து அழகிய ஓவியம் உண்டாவதுபோல, ஆண் பெண் சேர்வதால்தானே குடும்பம் உண்டாகிறது! அவனோ ஏழை; ஆனால் ஒரு ஏந்திழையின் அரவணைப்பு தேவைப்பட்டது அவனுக்கு! ஏழை என்றால் மனம் இருக்காதா? அந்த மனதிலே ஆசை பிறக்காதா? இயற்கையின் கட்டளைப்படி அவனுக்கும் ஆசை பிறந்தது! செல்வச் சீமானாக அவன் இருந்திருந்தால் பலர் அவனை மருமகனாக்கிக் கொள்ள படை எடுத்திருப்பார்கள். ஆனால் அவன் ஏழை! அவனைத் தேடிப் பெண் கொடுக்க யாரும் வரவில்லை. ஆகவே அவனே தேடலானான்.

ஒரு மாடப்புறாவும் கிடைத்தது. பள்ளியிலே பணியாற்றி வந்த ஒரு வெள்ளி நிலவை திருமணம் என்ற வலைவீசிப் பிடித்தான். வானிலே வட்டமிடும் ஜோடிப் புறாக்களைப் போல, அவனும் அவளும் வாழ்க்கையைத் துவக்கினர். இன்பப் பெருக்கில் அந்த இளங் காதலர்கள் உலகத்தையே மறந்திருந்தனர்.

பளிங்கு மேனியாள் தன் வாழ்வில் பங்கு கொள்ள வந்துவிட்டாள்—இனி துளியும் துயரம் தன்னை தொடராது—இன்பத்தின் ஊஞ்சலில் வாழ்க்கை வானத்தைக் கடப்போம்—என்றெல்லாம் கனவு கண்டான். பட்டுப்போன மனதிற்கு நீர் வார்க்க பட்டு நிகர் மேனியாள் கிடைத்து விட்டாள்; இனி தன் வாழ்க்கை மரம் துளிர்க்கும்—என்றெல்லாம் எண்ணுவான். ஏங்கித் தவித்த அவன் உள்ளத்துக்கு ஏந்திழையாளின் அந்தி நிகர் கன்னங்களும், சந்திர முகமும், சிந்தை கவரும் கனி மொழியும், விந்தை பலபுரியும் இதழ்களும் இன்பத்தை அளித்தன. அவனது ஏக்கத்தை—தனிமை உணர்ச்சியை—பனிப் பார்வையால் விரட்டினாள், அவன் வாழ்வில் பங்கு கொண்ட தங்கத் தாமரை முகத்தழகி! அவளது அரவணைப்பிலே அமைதியைக் கண்டான். கதை பேசும் கண்களை காணும்தோறும் கவலை அவனை விட்டு ஓடும். அவன் உள்ளத்திலே புயல் ஓய்ந்தது! அமைதி எழுந்தது!

அலைமோதும் ஆழ்கடலின் கரை ஓரத்திலே—எழில்கொழிக்கும் மலை உச்சியிலே—வான வில்லின் வர்ண ஜாலங்கள் நிரம்பிய வண்ண மலர் சோலையிலே — செந்தமிழை வாரி இறைக்கும் படக்காட்சி சாலையிலே—அந்த இளம் வானம்பாடிகளைக் காணலாம்.

தன் கைபிடித்த காரிகையின் உள்ளம் இன்பத்தில் மிதக்க பணத்தை வாரி இறைத்தான். இன்பவல்லியின் களிப்பே தன் பேரின்பம் எனக் கருதி, தான் சம்பாதிக்கும் செல்வத்தை செலவழித்தான். வெல்வெட் சோலியும், 'டிஷ்யு சாரி'யும் வாங்கித் தர இயலவில்லை என்றாலும், சாட்டின் சோலியும், வாயல் புடவையும் வாங்கித் தர அவன் தயங்கியதில்லை. முல்லைச் சரம் இல்லாமல் அவன் வீடு திரும்பியது கிடையாது. கருநாகம் போன்ற நீண்ட அவளது பின்னலிலே அதைச் சூட்டுவான்; அவள் முல்லைப் பற்கள் தெரிய சிரிப்பாள்; அவன் உலகத்தையே மறப்பான்!

நாட்கள் என்கிற மழைத் துளிகள், மாதம் என்ற வெள்ளமாக ஓடியது. இருவரது சம்பாத்தியமும் வாழ்க்கைப் படகை இன்பமாக செலுத்த போதுமானதாக இருந்தது. கவலையை மறந்து கானம் பாடி மகிழ்ந்தனர்......

ஒரு நாள்! அவர்கள் வாழ்க்கை வசந்த மாளிகையிலே புயல் வீசத் தொடங்கிற்று. 'கலா!" என்று அழைத்தபடி வீட்டிற்குள் நுழைந்த அவன், கலங்கியகண்களுடன், அழுது அழுது வீங்கிய முகத்துடன் காட்சி அளித்த மனைவியைக் கண்டதும் துணுக்குற்றான்.

"கலா! ஒளி வீசும் உன் முகத்தில் வாட்டமேன்? கதை பேசும் உன் கண்கள் கலங்குவானேன்? என்ன நடந்தது? சொல், என் சொர்ணமே!" என்றான்.

அவள் கண்ணீரைத்தான் பதிலாகத் தந்தாள்.

"கலா! என் வாழ்வே! உன் கண்கள் நீரைக் கொட்டினால் என் இதயம் உதிரத்தைக் கொட்டுகிறது. என் இன்பமே! உன் துன்பத்திற்கு காரணம்தான் என்ன?"

"அத்தான்...!" — விக்கலுக்கிடையே வெளிவந்தன வார்த்தைகள். கோர்த்த முத்துக்களைப் போல கண்ணீர் சொரிந்து நின்றாள், அவள்.

"கண்ணே: அழாதே!" என்று கூறி தன் உதடுகளால் அவளது கண்ணீரைத் துடைத்தான். அவளும் அவனது அரவணைப்பிலே சிறிது சாந்தியைக் கண்டாள்.

"அத்தான்! இனி நான் பள்ளியில் பணியாற்ற முடியாது!"

"ஏன்? வேண்டாமென்று கூறி விட்டார்களா?"

"இல்லை. மானத்தை இழக்கச் சொல்கிறார்கள்!"

"என்ன?..."

"ஆமாம், அத்தான்: ஆமாம்! தங்களுக்கு உரிமையான இந்த மலரின் தேனை ருசிக்க முயலுகிறார்கள். கயவர்கள்—பெண்ணினத்தைக் கடைத் தெருவில் வாங்கும் பொருள் என எண்ணும் கருத்துக் குருடர்கள்! பெண்கள்—இன்பப் பேழைகள்–தொட்டால் துவளும் பூங்கொடிகள்–நினைத்த நேரத்தில் தேனைத் தரும் மலர்கள்—என்று நினைக்கும் பித்து மனம் கொண்டோர் கையிலே சிக்கியிருக்கிறது என் பள்ளியின் நிர்வாகம். அவர்களின் ஆசை வார்த்தையிலே—மோகனச் சிரிப்பிலே — பல மோகனாங்கிகள் சிக்கியிருக்கலாம். செல்வத்தை — செல்வாக்கை—அந்தஸ்தை — அதிகாரத்தைக் காட்டி, கட்டிளங் குமரிகளின் கற்பைச் சூறையாடியிருக்கலாம். அந்தப் பட்டியலிலே என்னையும் சேர்க்க முயற்சிக்கின்றனர், அத்தான்! பெரிய மனிதர்கள் என்ற போர்வையிலே பதுங்கியிருக்கும் குள்ளநரி மனம் படைத்தோர், என் கற்பையும் காவு கொள்ளப் பார்க்கிறார்கள். மானத்தை இழந்தால் பட்டுப் புடவையும், பட்டை தீட்டிய வைரமும் என் காலடியில் குவியும் என்று ஆசைகாட்டி, என் வாழ்வைப் பாழாக்கத் திட்டம் தீட்டுகின்றனர். 'சட்டம் என்னச் செய்யும், பணம் எம் கையில் இருக்கும் வரை?' என எண்ணும் குணம் இழந்த சண்டாளர்கள்! 'இன்பம் தா: இல்லையேல் துன்பம் உன்னைத் தொடரும்! பணிந்துவிடு: இல்லையேல் இங்கே நீ மீண்டும் பணியாற்ற முடியாது!' என்று கூறுகிறார்கள் குறைமதி கொண்டோர், அதிகாரம் தன் கையிலிருக்கிறது என்கிற மமதையால். அத்தான், இனி ஏது செய்வேன்?...பெண்குலத்தை மண்ணில் புதைக்க நினைக்கும் கண்ணற்ற கபோதிகளின் கூடாரத்திலே நான் எப்படி உலவ முடியும்? வேங்கைக் காட்டிலே வலம் வரும் புள்ளி மானின் கதி என்ன ஆவது? மாடப்புறு வல்லூறுகளின் வலையிலே சிக்கினால்......! மானம்—மானம்—மானம் ஒன்றே

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

★ "இன்பபுரிக்கு ஏது வழி?" என்று சிறகடித்துப் பறந்தன அந்த ஜோடிப் புறாக்கள்,.....வழிகாட்டியும் புலப்பட்டது...ஆனால் சமுதாயத்தில் உலவும் நச்சரவங்களாம் — நயவஞ்சகப் 'பேய்'க் கூட்டத்தினர் நட்டுவைத்த அந்த வழிகாட்டியோ...'இருண்ட உலக'த்திற்குத்தான் பாதை காட்டியது...!

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்.....

★ பரிமளாவைக் கொலைக் குற்றத்திலேயிருந்து விடுவிப்பதற்காக, துக்காராம், ஷோக்சுந்தரி வேடத்தைக் கலைத்து குடுகுடுப்பை வேடம் அணிகிறான். பரிமளாவும், துக்காராமை விடுவிப்பதற்காகவும், தன் அத்தானுடன் சேர்ந்து சாவதற்காகவும் தன் குடுகுடுப்பை வேடத்தை அவனுக்கு மாற்றி விடுகிறாள். ஆனால், குடுகுடுப்பை வேடத்தில் உள்ள துக்காராம், மேனகாவைக் கொன்ற குற்றத்திற்காகப் போலீசாரால் இழுத்துச் செல்லப்படுகிறான்எல்லாக் காரியங்களும தனக்கு சாதகமாகவே நடைபெற்று வருகின்றன என்று கருதிய அம்பலம், துரையின் கல்யாணத்தை விரைவில் முடிக்கத் துடிதுடிக்கிறார். துக்காராம் மீண்டும் சிறை சென்ற செய்தி அறியாத பரிமளா, அத்தானும் தானும் சேர்ந்து சாவது எப்போது என்பதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறாள்...

46. நிச்சயதார்த்தம் !

குடுகுடுப்பைக்காரனை சிறைக்கு அழைத்துப்போய் விட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்ட ராமன், ஷோக் சுந்தரி எந்த நிலைமையில் இருக்கிறாள் என்று பார்ப்பதற்காகத் தவித்துக் கொண்டிருந்தான். அம்பலம், ஏதோ யோசனையில் ஈடுபட்டவாறு வீடு முழுவதையும் அளந்து கொண்டிருந்ததால், அவனால் நினைத்ததை உடனே செய்ய முடியவில்லை.

அம்பலம் ராமனைப் பார்த்து, "டேய்—அந்த அறையிலே இருக்கிற பெண்ணுக்கு ஏதாவது பலகாரம் கொண்டு போய்க் கொடுடா!" என்று கூறிவிட்டுத் திண்ணைப் பக்கம் போனதுதான் தாமதம்; ராமன் தாவிப் பாய்ந்து பலகாரத் தட்டைத் தூக்கிக் கொண்டான். பலி கொடுக்கப்படும் ஆட்டுக் குட்டிக்கு ஆகாரம் கொடுப்பது போலத்தான் நமது காதலிக்கும்— அம்பலம், பலகாரம் கொடுக்கச் சொல்லுகிறார் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். ஷோக் சுந்தரிக்கு வரப்போகும் ஆபத்தை அந்தக் குடுகுடுப்பைக்காரன் சொல்லியிருப்பானா? அதைக் கேட்டு ஷோக் சுந்தரி என்ன ஆனாளோ? —என்றெல்லாம் பிரலாபித்தான். "அய்யோ! என் காதலி, எதற்காக இங்கே வந்து சிக்க வேண்டும்? என்னைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையிலே அவள் இங்கே வரலாமா? அப்பத்தானே பார்த்துட்டுப் போனேன்; அதுக்குள்ளே அவளுக்குத் தாங்க வில்லையா? இங்கே வந்து இப்படி மாட்டிக் கொண்டாளே!" —என்றெல்லாம் ஒப்பாரி வைத்தபடி, பலகாரத் தட்டுடன் புறப்பட்டான்.

திண்ணைப் பக்கம் போன அம்பலம் எதிரே வந்து, அவனிடம் அந்த அறையின் சாவியைக் கொடுத்து, "ஏய், ராமா! அறையைத் திறந்து அவளுக்கு வேண்டியதைச் செய். ஆள் புதுசு! அடைத்து வைத்திருப்பதாக நினைத்து அதிர்ச்சி அடைந்துவிடப் போகிறாள்! பிறகு காரியம் கெட்டுவிடும். அடைத்து வைத்திருப்பது அவளுக்குத் தெரியாது போலவே நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டு, மீண்டும் வாயிற் பக்கம் போனார். அவரது மண்டையிலே யோசனைகளும், திட்டங்களும் பிறிட்டுக் கொண்டிருந்தன.

ராமன், அறையின் சாவியைப் பார்த்து குதூகலம் அடைந்தான். தன் காதலியின் அருகே சென்று பேசுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதே யென்று மகிழ்ந்தான். சாவி தன்னுடைய கையில் இருப்பதால், எப்படியாவது ஷோக்சுந்தரியை இரவோடு இரவாக வெளியே அனுப்பி விடலாமென்றும் திட்டம் தீட்டிக் கொண்டான். அம்பலம், தன் விஷயத்தில் ஏமாந்து விட்டார் என்று ஆனந்தப் பெருமூச்சு விட்டான்.

ஒரு கையில் சாவி—ஒரு கையில் பலகாரம்—உள்ளமெல்லாம் காதலியின் நினைவுச் சுமை—இவைகளைத் தூக்கியவாறு ராமன் அறைப் பக்கம் ஓடினான்.

அவசர அவசரமாகக் கதவைத் திறந்தான். "கண்ணே!" என்ற அழைப்போடு உள்ளே பார்த்தான்.

ஷோக்சுந்தரியின் ஆடையையும் நகைகளையும் அணிந்து கொண்டு அங்கே பரிமளா நின்று கொண்டிருந்தாள். ராமன் பரிமளாவை அடையாளம் கண்டுபிடித்து விட்டான். ஆனாலும் குழப்பத்திலே சிக்கித் தவித்தான். தன் காதலி உடுத்தியிருந்த உடையேதான்! அவள் போட்டிருந்த நகைகளேதான்! ஆனால், முகம் மட்டும் எப்படி மாறிவிட்டது? ஒருவேளை காதல் மோகத்திலே முகத்தை சரியாகப் பார்க்காமல் போய்விட்டோமா?—என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

பரிமளா, ராமனைக் கண்டதும் திடுக்கிட்டாள். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "என்ன ராமா? என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

"நான் என்ன சொப்பனம் காணுகிறேனா?" என்றபடி கையிலேயிருந்த பலகாரத்தட்டைமெய் மறந்து கீழே போட்டுவிட்டு மரம் போல நின்றான் ராமன். அவனுக்கு சுயநினைவு வர சில நிமிஷங்கள் பிடித்தன.

"ஷோக்சுந்தரியைத் தேடிக் கொண்டு வந்தாயா?"—இந்தக் கேள்வியைப் பரிமளா கேட்டதும், "ஆமாம்; என் காதலி எங்கே?" என்று அலறினான் ராமன்.

"ஷோக்சுந்தரியைக் காப்பாற்ற வேண்டுமென்று மலையாள பகவதியிடம் மன்றாடினாய் அல்லவா?"

"ஆமாம்—அது எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்தில் மூழ்கினான் அவன். ஷோக்சுந்தரி எங்கே போனாள்? பரிமளா, எப்படி இங்கே வந்தாள்?-இந்தக் கேள்விகளுக்கு அவனால் பதில் காண முடியவில்லை. அவனது சிறிய மண்டை, இவ்வளவு பெரியகுழப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றதாயில்லை.

"என் காதலி எங்கே? எங்கே?" என்று ஆவல் ததும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

"அவளை விடுவித்து விட்டேன். உன் காதலி தப்பிவிட்டாள்!" என்று பரிமளா அவனைத் தேற்றினாள்.

"எப்படித் தப்பினாள்?"–அதை அறியத் துடித்தான் ராமன்.

பரிமளா, அவனிடம் முழுவிபரமும் சொல்ல வேண்டியதாயிற்று. அதற்கான பீடிகையை அவள் போட்டாள். "ராமா! உன் காதலியை நான்தான் காப்பாற்றினேன். நானில்லாவிட்டால் உன் காதலி உயிர் தப்பியிருக்க முடியாது. அதனால், நீ எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். பெரிய உபகாரம் ஒன்றுமில்லை. நான் சொல்லும் ரகசியம் எதையும் நீ வெளியிடக்கூடாது!"

ராமனும் 'சரி'யென்று ஆமோதித்து விட்டு, தன் காதலி தப்பியது எப்படி என்பதை அறியத் துடித்து நின்றான்.

பரிமளா, குடுகுடுப்பைக்காரனாக வந்தது தானே என்றும், தன் துரையை விடுவிப்பதற்காக அப்படி வந்ததாகவும், வந்த இடத்தில் ஷோக்சுந்தரியை விடுவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும், அதற்காக அவளுக்கு குடுகுடுப்பைக்காரன் வேஷம் போட்டு வெளியே அனுப்பிவிட்டதாகவும், ராமனிடம் கூறினாள்.

ஷோக்சுந்தரி, குடுகுடுப்பாண்டி வேஷத்தில் வெளியேறிய செய்தி கேட்டதும், ராமன் தீயை மிதித்தது போலக் குதித்தான். "அய்யோ! பகவதி வேஷத்தில்போனது என் கண்மணிதானா? ஆகா, மோசம் வந்ததே!" என்று புலம்பினான்.

பரிமளாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ராமனைத் தேற்றி விபரம் கேட்டாள். மேனகாவைக் கொன்ற குற்றத்தை குடுகுடுப்பையின் மீது சுமத்தி, தான் தப்பித்துக் கொள்ள அம்பலம் முயற்சி செய்து அதிலே வெற்றி பெற்று விட்டார்; அதற்கு ஷோக்சுந்தரி பலியாகிவிட்டாள்–என்ற விபரத்தை ராமன் வெளியிட்டு விம்மி விம்மி அழுதான்.

"குடுகுடுப்பைக்காரன் மீது குற்றம் சாட்டப் போவது, ஷோக்சுந்தரிக்கு முன்பே தெரியுமா?" என்று பரிமளா, ராமனிடம் வினவினாள்.

"தெரியும்! தெரியும்! நான்தான் அவளிடம் சொன்னேன்!" என்று ராமன் கதறினான்.

பரிமளாவுக்கு விஷயம் புரிந்து விட்டது. துக்காராம், தன்னை விடுவிப்பதற்காகவே மீண்டும் தியாகம் செய்ய முன்வந்திருக்கிறான் என்பது விளங்கிவிட்டது. ராமனிடம், ஷோக்சுந்தரிதான் துக்காராம் என்பதை விளக்க அவள் விரும்பவில்லை. சிறையிலேயிருந்து தப்பிய துக்காராம். ஷோக்சுந்தரியாக மாறி, குடுகுடுப்பைக்காரனாக மீண்டும் சிறை சென்றுவிட்ட சம்பவம் பரிமளாவின் உள்ளத்தைக் கலக்கியது.

ராமனோ, தன் காதலி சிறைக்குள் அடைபட்டு விட்டாளே என்று தவித்தான். பரிமளா அவனைச் சமாதானம் செய்தாள்.

"ராமா! உனக்காகத்தான் உன் காதலியின் உயிரைக் காப்பாற்ற நினைத்தேன். துரையோடு சேர்ந்து நான் சாகிறேன்; அவள் சாகக் கூடாது என்றுதான் அவளை வெளியேற்ற முயற்சித்தேன். நீ அழுது புலம்புகிறாயே என்றுதான், அவளுக்கு பகவதி வேஷத்தைப் போட்டேன். பகவதியின் மீது இப்படி ஒரு குற்றச்சாட்டு விழப்போகிறது என்று எனக்குத் தெரியவே தெரியாது! தெரிந்திருந்

தால் செய்திருக்க மாட்டேன். ராமா! நான் வேண்டுமென்று உன் காதலியை காட்டிக்கொடுத்ததாக நினைக்கிருயா? அப்படி நான் நினைத்திருந்தால் அவனை சாவிலிருந்து மீட்டிருப்பேனு? அவனுக்குப் பதிலாக நான் சாக நினைப்பேனு? யோசித்துப் பார், ராமா; எனக்குத் தெரியாமலே இப்படி ஆகி விட்டது!'' என்று பரிமளா அழுதாள்.

''உன் காதலியைக் காட்டிக் கொடுப்பேனு?'' என்று அவள் கேட்டாளே தவிர; ''அய்யோ, என் சகோதரன் துக்காராமைக் காட்டிக் கொடுத்துவிட்டேனே!'' என்று உள்ளுக்குள்ளே குமுறிஞள். துக்காராமின் தியாக உள்ளம் அவளைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தியது. அவன் சென்ற திக்கு நோக்கி மானசீகமாகத் தெண்டனிட்டு வணங்கிஞள்; வாழ்த்திஞள். அவனே மனிதன்! அவனே மனிதன்!—என்று அவள் இருதயத்தின் உதடுகள் உச்சரித்துக் கொண்டேயிருந்தன.

பரிமளாவின் வார்த்தையை ராமன் நம்பினுன். அவளுக்காக அனுதாபம் காட்டினுன். அம்பலத்தின்மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு, பரிமளாவின் வார்த்தைகளால் அதிகமாகவே வளர்ந்தது. அதோடு, தன் காதலியை சிறையில் போடவும் அம்பலந்தான் காரணம் என்கிறபோது ராமனின் ஆத்திரம் அளவு கடந்தது. ''எப்படியும் என் காதலியை நான் விடுவித்தே தீருவேன். என் காதலி குற்றவாளி அல்ல; அம்பலந்தான் கொலைகாரன் — என்று, துணியைப் போட்டுத் தாண்டுவேன். சத்தியம் செய்வேன்! சூடனை வைத்து அணைப்பேன்!''— இப்படியெல்லாம் கூறி—ராமன் தகதகவென ஆடினுன், தாங்காத ஆத்திரத்தோடு!

பரிமளா, அவனது ஆத்திரத்தை சிறிது தணித்து, அம்பலத்திடம் தன்னைப்பற்றி ஒரு பொய் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

''பொய் என்ன பிரமாதம்! இன்றிரவு, இங்கிருந்தே விடுவித்து விடுகிறேன்—பயப்பட வேண்டாம்!'' என்று கையிலேயுள்ள அறைச் சாவியைக் காட்டினுன்.

''நான் விடுதலை பெற விரும்பவில்லை. என் துரையோடு சேர்ந்து சாவதையே விரும்புகிறேன். ராமா! என்னை விடுவிக்க விரும்பாதே! நான் அவரோடு போகிறேன்! உன் காதலியை மட்டும் எப்படியாவது விடுவித்துவிடு! இன்ஞெரு விஷயம், ராமா! நீ அம்பலத்திடம் ஒரு பொய் சொல்ல வேண்டும் என்றேனே; அது என்ன தெரியுமா? ஷோக்சுந்தரி என்று நாம் நினைத்திருப்பது பரிமளாதான் என்று அவரிடம் கூறி,அவரை நம்ப வைக்க வேண்டும். புரிகிறதா? ஷோக்சுந்தரி வேடத்தில் பரிமளாதான் வந்திருக்கிருள் என்று அம்பலத்திடம் அழுத்தந் திருத்தமாகச் சொல்லி விடு! சொல்லுகிருயா ராமா?''

பரிமளா ராமனிடம் கெஞ்சிஞள். ராமனும், ''அப்படியே சொல்லுகிறேன்'' என்று தலையசைத்தான்.

''நீ அவரிடம் அப்படிச் சொன்ஞல்தான் நல்லது. இல்லாவிட்டால் உன் காதலிக்கு ஆபத்து வரும். ஷோக்சுந்தரி எங்கே என்று தேட ஆரம்பித்தால், நான் உண்மையைச் சொல்லித் தீர வேண்டிவரும் — இல்லையா?'' என்று மீண்டும் பரிமளா தந்திரமாகப் பேசிஞள்.

ராமனும், பரிமளா சொன்னபடியே சொல்வதாகக் கூறிவிட்டு, அதை விட்டு நகர்ந்தான். அம்பலத்தோடு பழகிக் கெட்டுப் போயிருந்த அவனது இருதயத்தைப் பரிமளாவின் கண்ணீரும், காதலியின் நினைவும் மாற்றியமைத்தன. காதலியை எப்படி மீட்பது? அம்பலத்தை எப்படிக் காட்டிக் கொடுப்பது? — இந்த யோசனைகளோடு, ராமன் அம்பலத்திடம் ஓடிவந்தான்.

ராமனின் ஓட்டத்தைக் கண்டு, அம்பலம்—''என்னடா விஷயம்?'' என்று பரபரப்போடு கேட்டார்.

''அறையிலே இருப்பது— பரிமளா! பரிமளா!'' என்று கத்திஞன் அவன்.

''என்ன? பரிமளாவா?''—அம்பலம் திடுக்கிட்டார்.

''ஆமாம்! ஆமாம்!''

''உளராதே முட்டாள்! ஷோக்சுந்தரியல்லவா இருக்கிருள்! பரிமளா,இங்கே எங்கு வந்தாள்?''

''அதுதான் தப்பு! நீங்கள் முகத்தை சரியாகப் பார்க்கவில்லை. பரிமளாவேதான்! துரையை விடுவிப்பதற்காக தந்திரமாக ஷோக்சுந்தரி போல வந்திருக்கிருள்.''

ராமன் வலியுறுத்திச் சொன்னதும், அம்பலத்திற்கும் குழப்பம் ஏற்பட்டது. ஒருவேளை, அவசரத்தில் நாம்தான் ஏமாந்துவிட்டோமோ, என்று சந்தேகப்பட்டார். ராமனையும் அழைத்துக்கொண்டு அறைப் பக்கம் ஓடிவந்தார். ஆம்; பரிமளாதான் இருக்கிருள்! முகத்தை நன்ருக உற்றுப் பார்த்தார். அவள், முகத்தை மறைத்துக்கொள்ள முயன்ருள். அம்பலத்திற்கு சந்தேகம் வலுத்தது. ''முகத்தை மறைக்காதே! என்னைப் பார்!'' என்று கத்திஞர்,காட்டெருமை போல! திடுக்கிட்டு நடுங்கியவளைப் போல, பரிமளா முகத்தை மறைக்காமல் நின்ருள்.

பரிமளாவேதான்! அம்பலத்திற்கு சந்தேகம் நீங்கியது. ராமனைத் தட்டிக் கொடுத்தார். தான் சொன்னபடியே ராமன் செய்துவிட்டான் என்று பரிமளாவும் திருப்தி அடைந்தாள். அம்பலம், சாகச வலை விரிக்க ஆரம்பித்தார்.

''பரிமளா! நீ ஏன் இப்படி மாறுவேடம் போட்டுக்கொண்டு ஷோக்சுந்தரி—கீக்சுந்தரி என்றெல்லாம் பொய் சொல்லவேண்டும்! உன் விஷயத்திலும் துரை விஷயத்திலும் என் மனம் மாறிவிட்டது என்பது உனக்குத் தெரியாதா? உங்களுக்கு கொடுத்த கஷ்டங்களுக்குப் பிராயச் சித்தமாகத் தானே, உங்கள் இருவருக்கும் கல்யாணம் செய்துவைக்க அலைந்துகொண்டிருக்கிறேன். பரவாயில்லை; காரியம் கைகூடப் போகிறது; நீயும் உன் காதலனும் இனிமேல் சந்தோஷமாக வாழ வேண்டிய காலம் வந்துவிட்டது. கடவுள், எப்படியோ உன்னை இங்கு அழைத்து வந்துவிட்டார். உன்னை நினைத்து ஏங்குகிற துரைக்கும் இனிமேல் கவலை கிடையாது; உங்கள் இருவரையும் விரைவில் தம்பதிகளாக்கப் போகிறேன். கவலைப்படாமல் இரு!'' என்று கூறிவிட்டு அம்பலம், அறைக் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

*

அன்று மாலையில், ஊர்ப் பொது மண்டபத்தில் அம்பலத்தின் தலைமையிலே ஊர்மக்கள் கூட்டப்பட்டார்கள். அம்பலம், மாயாண்டி இருவரும் காதுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். கூட்டத்தில் தாண்டவனும் இருந்தார். திடீரென்று எல்லோரையும் வரவழைத்த காரணம் தெரியாமல், ஊர் மக்கள் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

அம்பலம், ஊர் மக்களைக் கூட்டிய காரணத்தை விளக்க ஆரம்பித்தார். ''தாண்டவனுடைய மகள் பரிமளாவும், துரை என்ற வாலிபனும் காதலர்கள். அந்தக் காதலைத் தாண்டவன் அனுமதிக்காத காரணத்தால், பரிமளா ஊரைவிட்டே ஓடிவிட்டாள். அவள் ஊரிலே இருந்தால், தாண்டவன் அவளை வெட்டிக் கொலை செய்திருப்பார். ஊரைவிட்டு ஓடிய பரிமளாவையும், துரையையும் நான் நேற்றையதினம் பிடித்து நம் வீட்டில் வைத்திருக்கிறேன். அவர்கள் இருவரும் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிருர்கள். நானும் அவர்கள் திருமணம் செய்துகொள்வதை விரும்புகிறேன். தாண்டவனுடைய அபிப்பிராயம் தேவை'' — என்று அம்பலம் கூறியதும், தாண்டவன் கோபாவேசமாக எழுந்து, ''முடியாது! முடியாது!! அவர்கள் இருவரும் எங்கே? என்னிடம் காட்டுங்கள்! அந்த நாய்களை, துண்டு துண்டாக நறுக்கி எறிகிறேன்'' என்று கர்ச்சித்தார்.

அம்பலம் தாண்டவனிடம் நெருங்கி வந்து, ''தாண்டவா! என்ன இது, இன்னுமா உமது ஆத்திரம் அடங்கவில்லை? பரிமளா நீர் பெற்ற ஒரே மகள் என்பதை மறந்து விட்டீரா? அவளது விருப்பம்போல் காதலித்தவனையே...''— அவர் இதைச் சொல்லி முடிக்கவில்லை; அதற்குள் தாண்டவன் இடைமறித்து, ''முடியவே முடியாது! இது என்ன நியாயம்? நீங்களே சொல்லுங்கள்; அவள் விரும்புகிருள் என்பதற்காக எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு நாடோடிப் பயலுக்கா அவளைக் கொடுப்பேன்? தாண்டவன் செத்தாலும் சாவான்; அந்தத் தடியனுக்கு மாமனுராக மாட்டவே மாட்டான்!''—தாண்டிக் குதித்ததில் தாண்டவனின் குடுமிகூட அவிழ்ந்துவிட்டது.

அம்பலமும் விட்டுக்கொடுப்பவராக இல்லை. கைக்கு எட்டிய தூரத்தில் கிட்டிவிட்ட புதையலை கேவலம், தாண்டவனின் கோபத்தால் மட்டுமே இழந்துவிட சம்மதிக்குமா அவரது காத்துக் கிடந்த நெஞ்சு? ''என்னய்யா இது! இன்னும் உலகம் தெரியாத பத்தாம் பசலியாய் இருக்கிறீரே! இது என்ன, உனக்கும் அஞ்சலைக்கும் கல்யாணம் நடந்த காலம் என்று நினைத்துக் கொண்டீர்? யோசித்துப் பாருமய்யா: பரிமளாவைத் துரைக்குக் கொடுக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், அவளை மரக்கிளையிலோ—ஆற்று வெள்ளத்திலோ -பிணமாகத்தான் காண்பீர், தெரியுமா? ஏதோ சின்னஞ் சிறிசு—அதோட ஆசையைக் கெடுக்காதீர். ஆமாம்; சொல்லிவிட்டேன்'' என்ருர் அம்பலம். எங்கேயோ தெருக்கூத்தில் கேட்டு ரசித்த வசனத்தை மறக்காமல்.

தாண்டவன் பேசாமல் நின்ருர்.

''கோபத்தால் காதலை எதுவுமே செய்ய முடியாதய்யா! கதை தெரியுமா உமக்கு? லண்டன் சீமையிலே லைலாங்கிற ஒருத்தன், கயஸ¬ன்னு ஒருத்தியை காதலிச்சாளும். உன்னைப் போல ஒரு முன் கோபக்கார அப்பன் தடுத்தாளும். கடைசியிலே என்ன நடந்தது தெரியுமா? ரெண்டு பேரும் கடல்லே விழுந்து செத்துட்டாங்களாம்.... அந்த மாதிரி நிலைமை பரிமளா விஷயத்திலும் ஏற்பட அனுமதிக்க மாட்டேன்; ஆமாம்!'' — இப்படி ஏதோ கதை அளந்தார் அம்பலம்.

காட்டுராஜா காதல் சுவை பேசிஞர். மாயாண்டியும் அதை ஆமோதித்தார். வாயைப் பிளந்து கொண்டு உட்கார்ந்திருந்த கிராமத்து மக்களும் 'சூ' கொட்டிஞர்கள். அம்பலத்தின் பேச்சை மறுத்தறியாதவர்கள் அவர்கள். ஆகவே, ''கல்யாணம் செய்வது தான் சரி'' என்ருர்கள். ஆனல், எதிர்பார்த்தபடி தாண்டவன் சிறிதும் இணங்கவில்லை. துரையையும் பரிமளாவையும் துண்டாடி விட்டுத்தான் மறு வேலை என்று மார் தட்டிஞர்.

''காதலைத் தடுக்க நீ யார்? நான் அவர்களுக்குத் திருமணம் செய்தே தீருவேன்!'' என்று முழங்கிஞர், அம்பலம்.

தாண்டவன், அம்பலத்தை எதிர்த்துப் பேச முடியாமல் கூட்டத்தைவிட்டு வெளியேறிஞர்.

அம்பலம், ஊர் மக்களிடம், துரை, பரிமளா இருவரின் தூய காதலைப் பற்றி விளக்கி, அவர்கள் திருமணத்திற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அந்த ஆட்டுமந்தையும் தலையசைத்தது.

அதோடு, தாண்டவனல், துரைக்கும் பரிமளாவுக்கும் ஏதாவது ஆபத்து நேருமென்றும், அவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் ஊர் மக்களை எச்சரித்தார்.

கூட்டம் கலைந்தது. அம்பலம், மாயாண்டியிடம் – திருமணத்தை உடனே நடத்திவிடலாமென்றும், இரவே அவர்களைக் கொலை செய்து காவு கொடுத்து, அந்தக் கொலைக் குற்றத்தைத் தாண்டவன் மீது போட்டுவிடலாமென்றும், அதற்காகத்தான் ஊர் மக்களைக் கூட்டி தாண்டவனுடைய அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் கூறிஞர்.

மாயாண்டிக் கிழவரும், அம்பலத்தின் யோசனையைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்.

[வளரும்]

நாதசுர மன்னர் திருவெண்காடு டி. பி. சுப்பிரமணியம் அவர்கள், நவம்பர் முதல் வாரத்தில், தனது குழுவினருடன் மலேயா செல்கிருர் என்ற செய்தி கேட்டு மகிழ்கிறோம். சிங்கை, கோலாலம்பூர், மலாக்கா, பினங்கு—மற்றும் முக்கிய நகரங்களிலே அவரது இசை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. கடல் கடந்த நாட்டிலேயும் நாயன விருந்து அளிக்கச் செல்லும் அந்த இசைக் கலைஞரின் [illegible] தொண்டினைப் போற்[illegible]

பாடப் புத்தகங்களில் பாழும் கருத்துக்கள்!

சாயர்புரம்
27—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

திராவிட இயக்கங்களின் வளர்ச்சியைக் கண்டு பொருமைப் படுகிறவர்களும்— வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஏசி வருகிறவர்களும் திராவிடத்தில் காணப்படுவது நாம் அறிந்ததே. மாணவர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களிலும் இந்த எதிர்ப்புணர்ச்சி பிரதிபலிக்கிறது. உதாரணமாக, சென்னை பல்கலைக் கழகத்தார் 1953 — 56 ஆண்டுகளில் இடைக்கலை வகுப்பு மாணவர்கட்கு வைத்துள்ள ஆங்கில உரைநடைப் புத்தகத்திற்கு துணை நூல் எழுத வந்தோர், தங்களது வெறுப்புணர்ச்சியைக் காட்டியுள்ளனர். "செலெக்டட் இங்கிலீஷ் புரோஸ்" என்ற அந்த உரைநடைப் புத்தகத்தை மாக்மில்லன் கம்பெனியார் வெளியிட்டுள்ளனர். இப்புத்தகத்தின் இறுதியில் பண்டித நேரு, அலகாபாத் பல்கலைக் கழகத்தில் 1947-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் பேசிய பட்டமளிப்பு விழாப் பேச்சின் சுருக்கமும், ஆபிரகாம் லிங்கனது கெட்டீஸ்பர்க் சொற்பொழிவும் காணப்படுகின்றன. துணை நூல் எழுத வந்தோர் இந்த இரண்டு சொற்பொழிவுகளையும் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். பிரிவினை மனப்பான்மையைக் கண்டித்தும், ஒற்றுமை உணர்ச்சியை வலியுறுத்தியும் தனது சொற்பொழிவில் நேரு குறிப்பிடுகிறார். இதனை அடிப்படையாக வைத்தும், அமெரிக்காவில் அடிமையுணர்ச்சியால் ஏற்பட்ட வடநாடு, தென்னாடு சண்டையை லிங்கன் கண்டித்ததைக் கொண்டும், இவ்வாசிரியர்கள் (குறிப்பாக எம். என். இராகவன் பி. ஏ: பி. இ. டி.) நமது இயக்கங்களைக் கண்டித்துள்ளனர். அமெரிக்காவில் ஏற்பட்ட வடநாடு-தென்னாடு சச்சரவுக்கும், இங்குள்ள வடநாடு — தென்னாடு சச்சரவுக்கும் என்ன சம்பந்தமுள்ளது? இது அறிவீனத்தையும் பொருமையையும் காட்டுவதேயாகும்!

சோலை. மது

★

நேருவின் பார்வையில் வடக்கும்-தெற்கும்!

பெரம்பூர்,
11—10—55

அன்புடையீர்,

பஞ்சாப் நகரில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரு பண்டிதர் விமானத்திலிருந்தவாறே பார்வையிட்டாராம். வடநாட்டுக்கு ஆபத்து என்றதும் அலறி அடித்துக்கொண்டு ஓடுகிறார், நேரு. ஆனால், இரண்டாண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் கடும் புயலால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உதவியளிக்க நேருவோ, அல்லது மத்திய அரசாங்கமோ எவரும் முன் வரவில்லை! காரணம் என்ன? தென்னாட்டவர் என்ற எண்ணந்தானே? வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு விமானம் மூலம் உணவுப் பொருள்கள் அளித்திருக்கிறார்கள். தென்னாட்டவர் அன்று பசியால் பரிதவித்தபோது அவர்களுக்கு உணவு அளிக்க ஒரு கட்டை வண்டிகூட வரவில்லை. இன்று, "வெள்ள நிவாரணம்" திரட்டும் நேரு பண்டிதர், தென்னாட்டவர் புயலால் பாதிக்கப்பட்டபோது ஏன் உடனடியாக தமிழ் மக்களை ஆதரிக்க முன்வரவில்லை?

ஆ. மலர்மன்னன்.

★

தி. க. வும், தி. மு. க. வும்!

கரூர்
20—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

சென்ற தேர்தலில், திராவிடர் கழகம் சில இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களையும், சில இடங்களில் சுயேச்சை அபேட்சகர்களையும் ஆதரித்தது. திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸை எதிர்த்த சுயேச்சை அபேட்சகர்களை மட்டும் ஆதரித்தது. காங்கிரஸை ஆதரித்த தி. மு. க. அங்கத்தினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியது. இப்பொழுது நடந்த நகரசபைத் தேர்தலில் தி. மு. க. காங்கிரஸை எதிர்த்த அபேட்சகர்களை மட்டும் ஆதரித்தது. திராவிடர் கழகம் சில இடங்களில் காங்கிரஸையும், சில இடங்களில் சுயேச்சை அபேட்சகர்களையும் ஆதரித்தது.

தி. மு. க. வுக்கும், தி. க. வுக்கும் உள்ள வித்தியாசத்தை "இரண்டு வயலிலேயும் தெளிக்கப்பட்டது ஒரே வித விதைதான். ஆனால், இங்கே களையெடுப்பதும், நீர் பாய்ச்சுவதும், கழனியைக் கண்காணிப்பதும் கடமையுணர்ச்சியோடு கவனிக்கப்பட்டு வருகிறது. அதனால் வளர்ச்சி காணப்படுகிறது: வளம் தெரிகிறது!" என்று 17—6—55 'முரசொலி' எழுதியிருந்தது. அது முற்றிலும் உண்மையே! திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன செய்து வருகிறதோ, அதைத்தான் மக்களிடம் தெரிவித்து வருகிறது.

மு. சுப்பிரமணியன்
(கலைப்பித்தன்.)

★

முத்து வெற்றி!

மதுரை
27-10-55

29-10-55-ம் தேதி மதுரையில் நடந்த நகராட்சி மன்ற தேர்தலில் 9-வது வார்டுக்கு, திராவிட முன்னேற்றக் கழக மதுரை மாவட்ட செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் சுயேச்சையாக போட்டியிட்டார். அவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, ராமையா பிள்ளை போட்டியிட்டார். வாக்கு எண்ணிக்கையில் 2055 வாக்குகள் பெற்று எஸ். முத்து அவர்கள் வெற்றி பெற்றார்.

இந்த வார்டு மதுரையில் கம்யூனிஸ்ட்வாதிகளால் 'லெனின் கிராட்' என்று அழைக்கப்பட்டது. எஸ். முத்து அவர்களை தோற்கடிப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சி தன் முழுசக்தியையும் பயன்படுத்தியது. எனினும் 9-வது வார்டு மக்கள் சக்தியோ, ஜனநாயகவாதியும், உண்மை ஊழியரும், மக்களுக்கு தொண்டாற்றும் பண்பு படைத்தவருமான தோழர் எஸ். முத்து அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தது.

அன்பன்,
அ. பாண்டி

★

ஏனோ போலீஸ் படை?

ஆற்காடு
30—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

விலை உயர்ந்த காரிலே—பக்கத்திலே பலர் புடைசூழ தமிழ்நாட்டில் பவனி வந்தாரே நேரு, அவருக்கு ஏன் போலீஸ் பாதுகாப்பு? 'மக்கள் சுகமே—என் சுகம்!' என்று சொல்லும் அந்த மனிதகுல மாணிக்கத்திற்கு போலீஸ் பாதுகாப்பு அவசியம்தானா? யோசியுங்கள். அந்தக் குடியரசுக் கோமான் மக்கள் மன்றத்திலிருந்து ஏதேனும் ஆபத்தை எதிர்பார்க்கிறாரா? இல்லையேல் அவருக்கென்ன பயம்? எதற்கு போலீஸ் படை? விடையிருக்கிறது; அகிம்சா சீலர்களின் ஆட்சிக் கொடுமையால் அவதியுறும் மக்கள் வடிக்கும் கண்ணீர்ப் பெருவெள்ளம், எங்கே தன்னை அடித்துச் சென்றுவிடப் போகிறதோ என்றுதான் அவர் பயப்படுகிறார். அதைத் தடுக்கத்தான் போலீஸ் படை! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; அந்த வெள்ளத்தை அதிக நாட்கள் அணையிட்டுத் தடுத்து வைக்க முடியாது என்பதை ஆட்சியினர் உணர வேண்டும்.

அன்பன்
ஏ. கிருட்டிணமூர்த்தி

★

வடநாட்டில் கிறிஸ்துவர்கள்மீது காலித்தனம்!

திருச்சி
28—10—55

அன்புள்ள ஆசிரியருக்கு,

1955, அக்டோபர் திங்கள், 5-ஆம்நாள், காலை 6-30 மணிக்கு பீஹார் மாகாணத்திலுள்ள கயா ஜில்லாவில், வர்தமன் என்ற ஊரில், மாத்யூ மேழுக்கனல் என்ற கிறிஸ்துவப் பாதிரியார் கோவிலில் பூசை நடத்திக் கொண்டிருக்கையில், ஆரிய சமாஜ் சங்கத்தினர் தலைமையில் வந்த குழுவினர் சுவாமியாரையும், கிறிஸ்துவர்களையும் தடியால் தாக்கி பொருள்களைச் சூறையாடிச் சென்றார்கள் — என்று "என்குயரி" என்ற ஆங்கில பத்திரிகையிலும், "சர்வவியாபி" என்ற தமிழ் கத்தோலிக் வாரப் பத்திரிகை (அக். 23-ந் தேதி) யிலும் எழுதியுள்ளது. மற்ற பத்திரிகைகள் அதைப்பற்றி இருட்டடிப்புச் செய்துவிட்டன. அற்பச் செய்திகளை பத்தி பத்தியாகப் பிரசுரிக்கும் ஆரியப் பத்திரிகைகள் இதைப்பற்றி ஒரு வரியும் எழுதாத மர்மம் என்ன?—என்று கேட்கிறேன். மதவெறிக்கு ஆதரவு கொடுக்கிறதா? இத்தகைய இழிச் செயல்கள் எங்கு நடந்தாலும் மனித இதயம் படைத்த நல்லவர்கள் கண்டிக்கத்தான் செய்வார்கள். ஆரிய சமாஜத்தினர் காலித்தனத்தின் மூலம் தங்கள் கொள்கையைப் பரப்ப முயல்கிறார்கள் போலும்! மத்திய அரசாங்கம் வாய்மூடி மௌனியாக இருப்பது ஏன்? இதுதான் மதச் சார்பற்ற தன்மையா?

இப்படிக்கு,
ஏ. இருதயசாமி.

★

கடிதக் குறிப்புகள்.

தோழர் சு. நவநீதன் (அருவங்காடு), பொதுவுடமைப் பொன்னாட்டின் பிரதமராம் புல்கானின் பாரதம் வரும்போது, மோதிலால் மைந்தரின் மோகன அணைப்பில் சிக்கி மகிழ்வாரே தவிர, அவருடைய மோசக் கருத்துடை செயல்களை உணரமாட்டார்; 'புல்கானின் பார்வைக்கு' அவை அனைத்தும் மறைக்கப்படும்-என்று எழுதுகிறார்.

★

தோழர்கள் 'தமிழ்ப் பிரியர்கள்' (பூனா), எழுதியுள்ள கடிதத்தில், 'முரசொலி' கையடக்கப் புத்தக வடிவில் வெளிவர வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

★

தோழர் வே. மு. நேசன் (கிருஷ்ணகிரி), சென்ற 27-10-55—ல் கிருஷ்ணகிரிக்கு வந்த ஆச்சாரியாரின் வாரிசான சுப்ரமணியம், "படிப்பால் உயர்வு ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை; பட்டதாரிகள் எதை வாரிக் கொண்டார்கள்" என்று பேசிவிட்டு, சற்று நேரத்திற்கெல்லாம் "மாணவர்கள் நன்றாக கல்வியறிவு பெற்றால்தான் நாடு முன்னேறும்" என்று முன்னுக்குப் பின் முரணாக பேசினார்— என்று கண்டித்து எழுதுகிறார்.

★

தோழர் கா. சு. செல்லச்சாமி (சோழவந்தான் தி. மு. க. செயலாளர்), சென்ற 7-10-55 அன்று சோழவந்தான் புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் ஏற்றப்பட்டிருந்த தி. மு. கழகக் கொடியை கம்பத்துடன் காங்கிரஸ் தோழர்கள் களவாடி விட்டனர் என்றும், இந்த ஈனச் செயல் சென்ற சில மாதங்களில் எட்டாவது முறையாக நடைபெற்றிருக்கிறது—என்றும் எழுதுகிறார்.

★

தோழர் வெற்றிவேந்தன் (கோபிச்செட்டிப் பாளையம்) என்பவர், சென்ற 10—10—55 அன்று கோபிசெட்டிப் பாளையம் நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில், 20 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்களில் நான்கே பேர்தான் வெற்றியடைய முடிந்தது என்றும், இந்தப் படுதோல்விக்குக் காரணம் தி. மு. கழகத்தாரின் பகுத்தறிவுப் பிரச்சாரம்தான் என்றும் — எழுதுகிறார்.

★



(4) ‘சுமை தூக்கி’!

மூடை நாற்றம் வீசுகிறது- என்று கூறிவிட்டு மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓடியவர், திடீரென்று அதிலே விழுந்து புரளும் வேடிக்கையை புல்கானின் பார்த்திருக்க மாட்டார்.

சுரண்டல் இயந்திரத்தைச் சுக்கு நூருக உடைத்தெறிந்தவர்கள்—முதலாளித்வ சாக்கடையை பொதுவுடமைச் சுகாதார மருந்திஞல் மூடியவர்கள் — இவர்கள்தான் புல்கானின் ராஜ்யத்தின் பிரஜைகள்!

இங்கோ குடல் பிடுங்கும் நாற்றக் கிடங்கிலே ஊர்வலம் வருபவர் ஊராள்பவராய் இருக்கிருர், உலகுக்கு உபதேச மொழிகளை வழங்கிக் கொண்டு!

ரஷ்யாவின் முதல்வருக்கு பஞ்சசீலப்பண்டிதரின் பழைய வரலாறு நன்ருகத் தெரிந்திருக்கும். சண்டமாருதம் போல் சீறிக் கொண்டு, ஏகாதிபத்தியக் கூடாரத்தைக் கண்ட துண்டமாக்கும் சூளுரையுடன் வாழ்ந்தவரல்லவா அவர்! ஆனல் அந்த வீரமும், சீலமும், விடுதலை வெறியும், மடமையைப் படுகொலை செய்யும் பண்பு நலமும் வெயிலின் முன் பனித்துளி போல் அதிகாரத்தின் முன்னே அஸ்தமனமாகி விட்டது அவருக்குத் தெரிந்திருக்காது!

தூத்துக்குடி நகர சபைக்கு, 18-வது தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர், நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர்-தோழர்
கே. வி. கே. சாமி.

1944-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை அகமத்நகர் கோட்டையிலே நேரு இருக்க நேர்ந்தது, இன்னெரு ஏகாதிபத்தியக் கோட்டைக்கு அஸ்திவாரம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஆமாம்; இப்போது அவர் கட்டிக் காக்கும் வடநாட்டுஏகாதிபத்தியத்தைத்தான் அப்படிக் குறிப்பிடுகிருேம்! நான்கு மாதங்கள் வெள்ளைத் துரைகள் அகமத்நகர் கோட்டையிலே அவரைக் கைதியாக்கி மகிழ்ந்திருந்தனர். அப்போதெல்லாம் அறிவுலக ஜோதியாக இருந்த பண்டிதர், காராக்கிரகத்திலே ‘டிஸ்கவரி ஆப் இந்தியா’ என்னும் நூலை எழுதினர். அதிலேதான் இப்படிக் குறிப்பிடுகிருர்:

“மக்கள் புராணக் கதைகளிலே உள்ளவைகளை உண்மையென்று நம்பினர்களேயாஞல் அது **அபத்தமானதும், சிரிக்கத் தக்கதாகவும் ஆகிவிடுகிறது**... இப்போது யாரும் கிரேக்க கடவுள்களையும், தேவதைகளையும் பற்றிய கதைகளை நம்புவதில்லை; அதைப்போலவே நாமும் இவைகளை பாராட்டலாம்; அப்போது நமது எண்ணக் கோர்வையின் ஒரு அங்கமாக அவை மாறிவிடுகின்றன! ஆனல் நாம் அவைகளை நம்பிக் கொண்டிருந்தால் அது எத்தகைய **பாரமாக** மாறிவிடுகிறது தெரியுமா? அந்த நம்பிக்கை என்னும் **சுமையிஞல் அழுத்தப் பட்டு** அவைகளுடைய அழகைக் கூட இழந்து விடுகிருேமே!”

—[பக்கம்: 55]

—இது பதினேரு ஆண்டுகளுக்கு முன்னர் பண்டிதர் தந்த பகுத்தறிவு விளக்கம்!

பாரதம், இராமாயணம் போன்ற புராணக் கதைகளை நம்புவது அபத்தமனது என்று ஆணித்தரமாகக் கூறுகிருர்!

சிந்தனையில்லாமல் அவைகளை நம்பிஞல் அந்த சீர்கேட்டைக் கண்டு சிரிக்க வேண்டுமாம்!

பாரதத்திலும், இராமாயணத்திலும் உள்ள கற்பனைச் சரக்கிலே அழகு களிநடம் புரிகிறது—என்று சொல்லுங்கள்; ஒப்புகிருேம்! ஆனல் அவை ஆண்டவனுடைய அவதார லீலைகள் என்று நம்பிக் கொண்டு உங்களை நீங்களே பைத்தியக்காரர்களாக்கிக் கொள்ளாதீர்கள் — என்று பகுத்தறிவுப் பாயிரம் பாடியிருக்கிருர்! அந்த மூடநம்பிக்கையை ‘சுமை’யென்று செப்பவும் அவர் தயங்கவில்லை!

ஆனல் வானத்தைக் கீறி வழிகாட்டுவதாகக் கூறிய பஞ்சசீலம் பேசும் பண்டிதரோ, சென்ற அக்டோபர் இருபத்தி எட்டாம் தேதியன்று கூரை ஏறக்கூட தகுதியற்றவர் என்பதை நிரூபித்து விட்டார்!

ஆமாம்; அன்றுதான் எதை அவர் சுமை என்று காரி உமிழ்ந்தாரோ, அதை பதினேரு ஆண்டுகளுக்குப்பிறகு தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடியிருக்கிருர்! அதுமட்டுமல்ல; அந்த ஆபாசக் கூத்தை இந்தோனேஷியாவின் உபதலைவர் டாக்டர் ஹட்டாவுக்கும் காட்டியிருக்கிருர்!

டெல்லியிலே ராமலீலா உற்சவம்; அதிலே தென்னிலங்கை வேந்தன்—தீராதி தீரன் — சிந்தையெலாம், தோள்களெலாம் பூரிக்கச் செய்யும் போர் வீரன் இராவணனுடைய உருவத்தைச் செய்துவைத்து, அதற்குத் தீ வைத்திருக்கிருர்கள்!

ஆருயிர் சாய்ந்தாலும், அகிலமே வீழ்ந்தாலும் அண்ணனின் பக்கமிருந்து உண்மைக்குப் போராடுவேன் — என்று சூளுரைத்து, விபீஷணச் செயலுக்கு விடை தந்து அனுப்பிய கும்பகர்ணன் பொம்மையும் கொளுத்தப்பட்டிருக்கிறது!

இந்திரனையே ஜெயித்த இந்திரஜித்; ஆரிய தந்திரத்தைச்

○ தொடர்ச்சி 4-ம் பக்கம்

இப்படி திராவிட இனத்தவர்களின் உருவத்தைக் கொளுத்தி மகிழ்வதற்குத்தான் ‘பாண்டுங்’ நடத்தினீர்களா? பொறி பறக்கும் தீர்மானங்களை நிறைவேற்றினீர்களா?

இருண்ட உலகம்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

பெண்களின் அணிகலன் என்று எண்ணும் தமிழச்சியின் பரம்பரையிலே உதித்த நான்—கற்பே காரிகைகளின் அழகு என எண்ணும் தமிழக மண்ணிலே பிறந்த நான்—மானத்தை, என் செல்வத்தை விலைகூற முடியுமா? 'வறுமையே என்னை வாட்டினாலும், துன்பம் என்னைத் துரத்தித் துரத்தி அடித்தாலும், என் மானத்தை—என் கற்பை—என் செல்வத்தை—இழக்கமாட்டேன்' என்று கூறி வந்துவிட்டேன், அத்தான்!...'' -துக்கம் அவளது தொண்டையை அடைத்தது!

''கலா! கலங்காதே என்நிலவே! கயவர்களின் கையிலே சிக்கியிருக்கிறது இந்த உலகம். பணம் படைத்தோர் — குணம் இழந்தோர் கையிலே சிக்கியிருக்கிறது இந்த நாடு! நாதியற்றவர்களை—கதியற்றவர்களை — வறுமையால் வாடுபவர்களை—ஏழைகளை — பழி வாங்குவதே தொழிலாகக் கொண்ட வஞ்சகரின் பிடியிலே இருக்கிறது அதிகாரம்! அதிகாரத்தைக் காட்டி உதிரம் கொட்டும் பாட்டாளியையும் பழி வாங்குகிறார்கள். பெண்கள் வெறும் பட்டுப் பூச்சிகள் என்று எண்ணும் துட்டமனம் கொண்டோர் பெருகிவிட்டார்கள், கலா. மானத்தை இழந்து வாழும் இனத்தைச் சேர்ந்தவர்களல்ல நாம். வேலைக்கு உடனே ராஜினாமா எழுதிப் போட்டுவிடு. என் குல விளக்கே! இருண்ட உலகில்—கருத்துக் குருடர்கள் வசிக்கும் வையகத்தில்—நீ உலாவ முடியாது! பெண்ணும், ஆணும் சமம் என எண்ணும் உலகிலா நாம் வாழ்கிறோம்? என் இருண்ட இதயத்திற்கு நீ ஒளி ஏற்றிக் கொண்டிருந்தால் போதும் நான் உழைப்பேன்; என் களைப்பைப் போக்கும் மருந்தாக நீ இரு. துன்பம் என்னைத் துளைத்தாலும், உன் புன்னகை ஒன்று போதும், என் துயரைத் துடைக்க. இன்பமே! கவலையை விடு! எங்கே, சிரி பார்க்கலாம்... நம்மை குறையாட நினைக்கும் உலகத்தைக் கண்டு நாம் சிரிப்போம்!''

கலா வேலையை உதறித் தள்ளினாள். இருவரின் சம்பாத்தியத்தில் காலத்தை இன்பமாகக் கழித்துக் கொண்டிருந்தவர்கள், இப்போது ஒருவரின் வருவாயில் வாழ்க்கை நடத்துவது சிரமமாக இருந்தது. சிலவினங்களையும் குறைத்துக் கொள்ள இயலவில்லை. பட்டிணத்தில் நூறு ரூபாயில் ஒரு குடும்பத்தை எப்படி நடத்துவது? நண்பர்களிடத்திலே கடன் வாங்கும் அளவுக்கு அவனது பொருளாதாரம் துரத்தியது. அடுத்த மாத சம்பளத்தில் ஈடு செய்துவிடலாம் என்று எண்ணுவான். ஆனால் அவன் சம்பளம் வாங்கியதும் புதிய சிலவினங்கள் காத்துக் கிடக்கும். பழைய கடனைத் திருப்பித்தர இயலாமல் திண்டாடினான். கடன்காரர்கள் அவனை முற்றுகையிட ஆரம்பித்தார்கள். தொல்லையும், கவலையும் அவனைத் துளைத்தெடுத்தன.

★ திருச்சி நகரசபைத் தேர்தலில், 15-வது தொகுதியில், காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து வெற்றியடைந்த நமது தோழர்

ஆர். நாகசுந்தரம்.

இந் நிலையில் கலா ஒரு தங்கப் பேழையை பெற்றெடுத்தாள். பிரசவ சிலவுகள் வேறு சேர்ந்து கொண்டது. சிலவுகளுக்கே கஷ்டப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அவன் துரத்தப்பட்டான். கடனை அடைக்க இரவு நேரங்களில் ஒரு அலுவலகத்தில் கணக்கு எழுதும் பணியை மேற்கொண்டான். அல்லும் பகலும் அவன் ஓயாமல் உழைத்தான். என்றாலும்கூட, பிரசவத்தில் மீண்டு எழுந்த மனைவியையும், மழலைமொழி பேசும் குழந்தையையும் பேணி வளர்க்கவுமே அவனது வருவாய் போதவில்லை. பழைய கடன்களை எப்படித் தீர்ப்பான்? கடன் கொடுத்தவர்கள் கனல் தெறிக்கப் பேசலாயினர். தெருக்களிலே தலை நிமிர்ந்து நடக்க இயலவில்லை வறுமை அவனை வாட்ட ஆரம்பித்தது. வேதனை வேல்கள் அவனது உள்ளத்தைத் துளைத்தன.

சோலையில் மலர்கள் பூப்பது போல, அவர்களது குடும்ப நந்தவனத்தில் குழந்தைகள் என்ற மலர்கள் பூத்துக்கொண்டே இருந்தன. இயற்கைக்கு இரக்க சிந்தையே கிடையாது. வறுமைமையில் வாடினாலும், பசியார உணவு இல்லாவிட்டாலும், இயற்கை தன் வேலையை செய்து கொண்டுதானே இருக்கிறது! குழந்தைகளைப் பேணி வளர்க்கவும், பிரசவத்தால் உடல் நலம் குன்றிய தன் மனைவியைத் தேற்றவுமே அவனது வருவாய் போதவில்லை.

இரவும் பகலும் நல்ல உணவு இல்லாமல், ஓய்வின்றி உழைத்ததால், அவனது உடலும் சீர்குலையலாயிற்று. இருமல் நோயும் அவனைப் பற்றிக்கொண்டது. நோய் ஒரு பக்கம் வாட்ட, கடன்காரர்கள் மறுபக்கம் விரட்ட, அவனது உள்ளம் தூள் தூளாக உடைந்தது. வளர்பிறைபோல் நோயும் அவனைப் பற்றியது. படுத்த படுக்கையானான்.

அலுவலகத்திலும் இனி வேலை செய்ய லாயக்கில்லை என்று தாக்கீது அனுப்பிவிட்டனர். வீட்டிலே இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் மார்வாடிக் கடையை தஞ்சம் அடைந்தன. கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் தன் மனைவியைக் காணும்தோறும் கண் கலங்குவான். பசியால் துடிக்கும் பச்சிளம் பாலகர்களைப் பார்க்கும் போதெல்லாம் இதயம் வேதனையால் அழும்.

வசந்த மண்டபத்தில் ஊஞ்சலில் விளையாடுவதுதான் வாழ்க்கை என்று எண்ணியிருந்தான். ஆனால் அவன் வாழ்வு, புயலில் சிக்கிய படகாயிற்று. வாழ்க்கை, புஷ்பமாலை என்று கனவு கண்டான். ஆனால் அது நெருப்பின் ஜ்வாலை என்று அனுபவம் உணர்த்திற்று. திருமணத்தால் அவன் வாழ்வு மரத்தில் துளிர்த்த இலை சருகாயிற்று வறுமையின் வெப்பத்தால் தேன் சிந்திய வாழ்வு மலர், கருகலாயிற்று.

வறுமைத் தேளின் கொடிய நஞ்சு அந்த வாழ்விழந்தவனின் மனைவியை வேதனைக் குளத்திலே தள்ளியது. போர்க் களத்தின் கோரக் கதைகளைக் கண்டும் கேட்டுமிருந்த போதிலும், தான் பெற்ற செல்வமாம் ஒரே மகனின் கையிலே வேல் கொடுத்து, 'விரைந்து போ, செரு முகம் நோக்கி' என்றனுப்பிய வீரத் தமிழ்த்தாயின் கதையைப் படித்திருக்கிறாள் அவள். அது மட்டுமல்ல: பள்ளிச் சிறுர்களுக்கு கற்றும் தந்திருக்கிறாள். ஆனால், இப்போது வாழ்வுக் களத்திலே தோன்றிய சோகச் சம்பவங்கள் அவளது நெஞ்சிலே வீரத்தை ஊட்டவில்லை; கண்களிலே கண்ணீரைப் பாய்ச்சியது. ஓடினாள், தான் முன்பு பணி செய்த பள்ளியின் நிர்வாகிகளிடம், மீண்டும் வேலை கேட்டு! சூரியனின் கடும் வெப்பத்தால் கருங்கிப்போன மலரைப்போல் தங்கள் எதிரில் வந்து நின்ற கலாவைப் பார்த்த அவர்களோ, 'ஐயோ! கலாவா? என்ன இது கோலம்? ஒளி இழந்து தோன்றுகிறதே இக் குலவிளக்கு! ஐயோ...பாவிகள் நாங்களே! உன் பாங்கினைக் குலைத்த பண்பு கெட்ட துரோகிகள் நாங்களே! மீண்டும் செய்யம்மா உன் பணியை...'' என்று சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? இல்லை; இல்லவே இல்லை! எப்படிச் சொல்லுவார்கள்? அவர்களின் இருதயத்திலே தான் இரக்கமே இல்லையே! அவர்களோ, 'வலிய வந்துவிட்டாள் வனிதை! இனி வலை தேவையில்லை; அவளது கற்பை விலை பேசலாம், இனி வேலையை முன் வைத்து!' என்றே எண்ணினார்கள். எண்ணத்தையும் சொன்னார்கள். சூழ்ந்து நின்ற பசி எடுத்த பாழும் புலிகளைக் கண்டு அந்தப் புள்ளிமான் மிரண்டது. உணவின்றி வாட்டமா—அன்றி உடல் விற்று வாழ்வா?—என்ன செய்வாள்? முடிவில், தமிழ்ப் பண்பும் பெண்மையுமே தலை தூக்கியது; அந்தப் புள்ளி மானுக்கு புலிநிகர் வலுவைத் தந்தது. அடுத்தகணம் வஞ்சகரின் வலையறுத்துப் பாய்ந்தது அப் புள்ளிமான். ஆமாம்; 'அப்பப்பா' என்ற ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு, அந்தக் கொடியோரின் கூடாரத்தைவிட்டு ஓடினாள் அவள், ''மானம்; மானம்'' என்று முணகிக் கொண்டு!

★

வீட்டு வாடகை சரிவர கொடுக்காததால் வீட்டைக் காலி செய்யும்படி கட்டளை பிறந்தது. மனைவி அவன் கையைப் பிடித்துக் கொள்ள, செல்வ மக்கள் சிணுங்க, அவன் நடைபாதைக்கு துரத்தப்பட்டான். இரக்க சிந்தை உள்ளவர்கள் யாருமே இல்லையா? மக்களின் இதயம் இரும்புதானா? ஆதரிக்க யாரும் முன்வர மாட்டார்களா? மனிதத்தன்மை அடியோடு மாண்டு விட்டதா? குழந்தைகள் நாட்டின் செல்வங்கள் என்று எண்ணி, அவர்களின் வளர்ச்சிக்குப் பாடுபடும்நல்ல சமுதாயம் என்று எழும்? வாழ நினைத்தேன்; வாழ முடியாமல் துரத்துகிறது இந்த சமுதாய அமைப்பு—பெண்ணினம் ஆண்களின் படுக்கையறைப் பதுமை என எண்ணும் சமுதாயம் என்று சீர்படும்? மானத்தை இழந்தால், மாடமாளிகையில் வாழலாம் — மந்தகாச வாழ்வு தேடிவரும்; ஆனால்மானத்தை இழக்க மறுத்தால் வறுமைத் தேள் கொட்டுகிறது; என்று இந்த நிலைமாறும்? வாழ்க்கைப் படகில் ஏறி இன்பலோகம் போக நினைத்தேன்; ஆனால் சமுதாயம் என்னைத் துன்பத்தீயில் தள்ளிவிட்டது. மலர் பரப்பிய மஞ்சமல்ல வாழ்க்கை—முட்கள் நிரம்பியபாதை! இருண்ட உலகில் பகுத்தறிவுப் பரிதி தோன்றுவது எந்நாள்?—ஆயிரம் கேள்விகள் அவன் மனதிலே எழுந்தன.

நோயால் வாடும் அவனையும், கண்ணீரைக் கொட்டும் மனைவியையும், ''அம்மா, அம்மா'' என அழும் அந்தக் குழந்தைகளையும் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. நண்பர்கள் அவனைப் பார்க்காதது போல் முகத்தை திருப்பிக் கொண்டு போயினர். தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் போல முகத்தைச் சுளித்தனர். நடைபாதையில் நடக்கலாற்று, அந்த நாதியற்ற குடும்பம். கண்களில் கண்ணீர். உள்ளத்திலே புயல்! நடந்து கொண்டே இருந்தனர். இருண்ட உலகிலே அவர்கள் ஒளியைத் தேடிப் போயினர். அவர்கள் பயணம் எங்குதான் முடியுமோ?

ஏழையின் வாழ்க்கையே வேதனையும், சோதனையும் நிரம்பியது! கொடுமையும், கொடூரமும் சேர்ந்த காட்டிலே வாழ்கின்ற கொடும் புலிக்கும், சீறும் சிறுத்தைக்கும் வாசம் செய்ய குகை கிடைக்கிறது. விண்ணிலே வட்டமிடும் பறவைகளுக்கும் கூடு உண்டு. ஆனால் ஏழைக்கு...? நடைபாதையில் வசிக்கக்கூட உரிமை இல்லை வெட்கம்! வெட்கம்!!

★

பொன்முடியின் கடிதம்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

'வாபஸ்' ஆகியிருக்கிறது. இதற்கு என்ன காரணமென்று நினைக்கிறாய்?

சம்யுக்த மகாராஷ்டிரம் கூடாது என்ற கொள்கை கொண்ட கனவான்கள் திருமூர்த்திகளை அணுகியிருப்பார்கள். அப்போது என்ன நடந்ததோ—அதன் விளைவுதான் மகாராஷ்டிரத்தின் உதயம் பற்றி சமிஷனுடைய அறிக்கையில் ஒரு வரிகூட இல்லை!

ஒரு ஹிரே பார்த்து மகிழ்ச்சி அடைகிற அளவுக்கு இந்த நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய பரம ரகசியம் இருந்திருக்கிறது. அந்த ரகசியத்தின் ரட்சகர்களோ ராஜ்பானுபவம் பெற்ற உத்தமர்கள்; அவர்களுள் ஒருவர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்தவர்!

—இதுதான் குமார் நேரு உயிரூட்டிய சமிஷனுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கும் ஜனநாயகத் தத்துவம்!

அன்பன்,

பொன்முடி.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

சிறுகதை

தோல்வியல்ல; வெற்றியேதான்!

"ஐயோ, ஐயோ!" என்ற சோக அலறல் அந்தக் குடிசைக்குள்ளிருந்து எழும்பியது. தலையிலே முண்டாசு—கையிலே கம்பு—இந்தக் கோலத்தோடு ஊருக்குப் புதியவனைப் போல நடந்துகொண்டிருந்த ஒரு மாட்டுக்காரச் சிறுவன் அந்தக் குடிசைக்குள் ஓடினான். ஓட்டைக் குடிசை — உருண்டு கிடந்த பானைச் சட்டிகள்—இவை எல்லாம் கண நேரத்தில் அவன் கண்களில் தென்பட்டன. மறு கணம் குடிசையின் மேடு பள்ளம் நிறைந்த தரையில் ஒரு மனிதன் விறைத்துக் கிடந்ததைக் கண்டான். அது பிரேதம்! அப்பப்பா! என்ன பயங்கரம்! அந்தச் சிறுவனுக்கு தலை சுழன்றது. அந்த பிரேத மனிதனின் மனைவியும் குழந்தைகளும் பிணத்தின்மேல் விழுந்து அலறிக் கொண்டிருந்தார்கள்.

நடந்தது என்ன என்று அறிய அவன் மனம் துடிதுடித்தது. அப்போது, "விஷம் உடம்பெல்லாம் பரவிவிட்டது" என்று சொன்னார் ஒரு மனிதர்.

"என்னங்க, பாம்பு கடித்துவிட்டதா?" என்று அந்தச் சிறுவன் கேட்டான்.

"ஆமாம் தம்பி; பாம்புதான் கடித்துவிட்டது! ஆனால்..." என்று இழுத்தார் அந்த மனிதர்.

"என்ன, ஆனால்?... பாம்பை அடிக்காமல் விட்டுவிட்டீர்களா?"

"இல்லை தம்பி! அந்தப் பாம்பை அடிக்கவே முடியாது!..."

"புரியும்படிச் சொல்லுங்களேன்..."

"சொல்கிறேன் தம்பி! இவனைக் கடித்தது சாதாரணப் பாம்பல்ல; பணப் பாம்பு—பதவிப் பாம்பு—மன்னன் என்ற பயங்கரப் பாம்பு..."

"என்ன...?"

"ஆமாம் தம்பி! பாம்பினும் கொடியவன் இந்த நாட்டு மன்னன்! அவனுக்கு வேண்டியது பணம்! பணம்!! பணம்தான்!!! அந்தப் பொல்லாத பண ஆசையால் அவன் பண்ணாத அநியாயம் கிடையாது! எடுத்ததற்கெல்லாம் வரி—எதற்கும் அபராதம்-இப்படி மக்களை வாட்டுகிறான்; வதைக்கிறான்.இதோ, இறந்துகிடக்கிறானே இவனுக்கு குழந்தைகள் அதிகம்! குழந்தைகள் வரி என்ற கொடிய வரி ஒன்றுண்டு. நாளை அதற்கான பணத்தைக் கட்டாவிடில் இவனது குடும்பத்தையே சிறையில் அடைத்து விடுவார்கள், கொடுங்கோலனின் எடுபிடிகள். என்ன செய்வான்?மானம் காக்க மரணத்தைத் தேடினான். விஷம் தின்று விட்டான்..."—அந்த மனிதர் இப்படிச் சொன்னார். அவர் குரல் தழதழத்தது.

பேசாமல் நின்றான் சிறுவன்.

"இப்போது மட்டுமென்ன? அவன் தப்பினான். ஆனால் அவன் மனைவி சிக்கிவிட்டாள். இவனது குழந்தைகள் வரியுடன், இவனது மரணவரியையும் அவள் செலுத்தியாக வேண்டும்..."

மனிதர் முடிக்கவில்லை. "அக்ரமம்" என்று கத்திக் கொண்டே, கையிலிருந்த கம்பை ஆத்திரத்துடன் தரையில் 'டக்'கென்று குத்தினான் அந்தச் சிறுவன்.

மனிதர் பயத்துடன் அவனது வாயைப் பொத்தினார். "உரக்கச் சொல்லாதே, அப்பா! யார் காதிலேயாவது விழுந்தால் ஆயிரம் வெள்ளிப் பணங்கள் அபராதம்—அல்லது தூக்குமேடை!" என்றார்.

பையன் அரசனின் பண ஆசைக்குப் பலியான மனிதனின் பிணத்தைப் பார்த்தான்.அவன் கண்கள் கலங்கின. கண்ணீருக்கிடையிலும் கோபம் பளிச்சிட்டது. பாவம், அவனது கோபம் அந்தக் கொடுங்கோலன் ஆட்சியை என்ன செய்யும்; பைத்தியக்காரன்!

வேகமாக நடந்தான். அடுத்தத் தெருவை அடைந்தான். அங்கே ஒரு குடிசை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. 'என்ன இது' என்று முணுமுணுத்துக் கொண்டே ஓடினான். எரிந்து கொண்டிருந்த தீயுக்கு எதிரிலே, அழுது கொண்டு நின்றது ஒரு குடும்பம்!

"என்ன, என்ன நடந்தது? ஏன் தீயை அணைக்காமல் நிற்கிறீர்கள்?" என்று பதட்டத்துடன் கேட்டான் மாட்டுக்காரச் சிறுவன்.

"இது அணைக்க முடியாத தீ தம்பி! மன்னனின் பேராசைத்தீ என்று அடங்குகிறதோ, அன்று தான் இந்த மாதிரி தீயும் அணையும்! வரி கொடுக்க முடியவில்லை என்பதற்கு இந்தத் தீ தண்டனை!..."—அந்த வீட்டுக்காரன் 'ஓ' என்று அழ ஆரம்பித்து விட்டான்.

பையன் மேலும் நடந்தான். பட்டினியால் புலம்பிக் கொண்டிருந்தோரை—மரணக்குரல் கிளப்பிக் கொண்டிருந்தோரை—நடைபாதைப் பிணங்களை—இன்னும் மன்னனால் நாசமாக்கப்பட்ட பல்லோரை சந்தித்தான். 'இது என்ன நாடா, காடா?'என்றுபுலம்பினான். நடந்து கொண்டேயிருந்தான்.

★

இப்படி பண ஆசைபிடித்த கொடுங்கோலனாக நமக்கு அறிமுகமான மன்னனை, நாம் சந்திக்க வேண்டாமா? நாளை அரண்மனைக்குச் செல்வோம்.

பொழுது புலரும் நேரம். அரண்மனை வாசலில் கட்டிக் கிடக்கும் கொடும் புலிகள் உறுமிக் கொண்டிருந்தன, மன்னரும் எங்கள் பரம்பரைதான் என்று சொல்வதைப் போல! ஆனால் மன்னரோ அப்போது புலியாக இல்லை. புத்திர சோகத்தால் புலம்பிக் கொண்டிருந்தார். ஆமாம்; மன்னரின் ஒரே செல்வமகன்விஜயனின் அறையிலே மன்னர் கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தார்."ஓகோ கோ... ஹா ஹா ஹா... ஹி...ஹி...ஹி...!" என்று 'பேய்ச் சிரிப்பு' சிரித்துக் கொண்டு, அறைக் குள்ளிருந்த கண்ணாடிப்பாத்திரங்களை உடைத்துக் கொண்டிருந்தான் அரசரது செல்வமகன் விஜயன்! கலைந்து கிடந்த தலை—பிய்த்தெறியப்பட்ட ஆடைகள்—செந்நிறக் கண்கள்—இந்தப் பரிதாபக் கோலத்தோடு விஜயன் புலம்பினான்; பிதற்றினான்; தொண்டை கிழியக் கத்தினான்!

மன்னர் அழுதேவிட்டார். மெதுவாக அவனருகில் சென்றார். "விஜயா!... வாடா கண்ணு! குதிரைச் சவாரிக்கு செல்வோம்" என்றார்.

"ஓகோ கோ!... குதிரைச் சவாரியா? யாரடா இவன்? நாயே! பேயே!... இந்தச் சிங்கம் குதிரை மேல் ஏறுதுடா, முட்டாளே! காளைமாடு கொண்டுவாடா.அதில் தான் சவாரி செய்வேன்! போடா, போ!... இல்லையேல் இந்தக் கத்தி உன் உயிரை..." என்று கத்தினான் விஜயன்.மன்னரின்இடையிலிருந்த கத்தியை உருவினான். அவர் தலையைச் சீவப் பாய்ந்தான். மன்னர் "ஐயோ" என்று அலறிக் கொண்டு ஓடிவந்தார். அவர் கண்கள் கண்ணீர்க் குளமாயின.

"என்ன ஐயா மருத்துவரே! என்ன சொல்கிறீர்கள்?" என்றார். குனிந்ததலையுடன் பக்கத்தில்நின்று கொண்டிருந்தஅரண்மனை மருத்துவரிடம்.

மருத்துவர் தலையை நிமிர்த்தினார். "நான் என்ன செய்வது மகாராஜா! இது தீராத பைத்தியம்—மருந்துக்குக் கட்டுப்படாத தீய நோய்! இன்னும் ஐந்துநாட்கள் இளவரசர் இப்படியே கத்திக் கொண்டிருப்பார்..."

"அப்புறம்...?"

"அப்புறம்...மண்டை வீங்கி... ஐயோ...மன்னிக்க வேண்டும் மகாராஜா!...நம் நாடு சந்ததியை இழந்துவிடப் போகிறது! ஆமாம்; இளவரசர்..."

"என்ன?..."

"இறந்து விடுவார்!"

"ஐயோ" என்று அலறினார் மன்னர். "விஜயா! விஜயா!" என்று புலம்பினார்.

மருத்துவர் மீண்டும் பேசினார். "ஆமாம் மகாராஜா! இளவரசரின் மரணம் தவிர்க்க முடியாதது..."

அவர் முடிக்கவில்லை. அதே சமயம் "ஏன் முடியாது? இளவரசர் பிழைக்க முடியும்!" என்று குரல் எழும்பியது. எல்லோருடைய கண்களும் ஏக காலத்தில் அறையின் வாசலை நோக்கின. வேக வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தார், அரண்மனைச் சோதிடர்.

"என்ன? என் மகன் பிழைப்பானு? சோதிடரே! சொல்லுமையா, விபரத்தை!"—பின்ளைப் பாசத்தால் பித்தனைப் போல சோதிடரின் தோள்களைப் பிடித்து உலுக்கினார் மன்னர்.

"மகாராஜா! நேற்று இரவு நீங்கள் என்னிடம் விபரம் தெரிவித்தது முதல், நான் இளவரசரின் ஜாதகத்தைத் துருவித் துருவிப் பார்த்தேன். சுவடிகளைத் தேடித் தேடி அலுத்தேன். அவரைப் பிழைக்க வைக்க ஒரே ஒருவழி தான் புலப்பட்டது. சொல்லட்டுமா?......"—சோதிடர் இழுத்தார்.

"சொல்லும்; சொல்லும்!"—அரசர் துடித்தார்.

"மகாராஜா! நாளை சூரியஉதயத்திற்குள்,இந்த நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் பக்கனை உணவு—புத்தம் புதிய உடைகள் அளித்து, கையிலே பத்து தங்கப் பணங்களும் கொடுத்து உபசரிக்க வேண்டும்..."

"என்ன; என்ன? ஒவ்வொருவருக்கும் பத்து தங்கப் பணங்களா?...ஐயோ!..."

"ஆம் மகாராஜா! இளவரசர் பிழைக்க வேறு வழியில்லை!..."

மன்னர் யோசித்தார். "ஓகோ கோ!" என்று சிரித்துக் கொண்டே படுக்கை மெத்தைகளைப் பிய்த்து, பஞ்சைப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான் பைத்தியக்கார இளவரசன். உடனே மன்னர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மந்திரியின் பக்கம் திரும்பினார். "அமைச்சரே! சோதிடர் சொன்னபடியே உடனே 'தானம்' ஆரம்பமாகட்டும்!" என்றார். விறு விறு என்று நடந்தார்.

★

"தானம் எப்படி நடக்கிறது அமைச்சரே?"—தன் அறையில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்த மன்னர், எதிரில் வந்து நின்ற அமைச்சரைப் பார்த்துக் கேட்டார்.

"வேகமாக நடக்கிறது மன்னவா! மக்களில் பெரும்பாலோர் அதை நம்பவில்லை; அரண்மனைக்கு வரவே பயந்தார்கள். அவர்களை எல்லாம் பலவந்தமாக பல்லக்குகளில் ஏற்றி, நமது அரண்மனைத் தோட்டத்தில் அடைத்து வைத்து தானம் செய்தோம். அநேகமாக எல்லாம் முடிந்துவிட்டது...கஜானாவும்...!"—மந்திரி இதைச் சொன்னதுதான் தாமதம்; "என்ன, தானமெல்லாம் முடிந்துவிட்டதா?" என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே விஜயனின் அறையை நோக்கி ஓடினார் மன்னர்.

★

"விஜயா! விஜயா!" என்று அழைத்தார் மன்னர்.

அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து கிடந்த விஜயன் கண்ணைத் திறந்தான். "என்னப்பா! என்ன செய்தி?..." என்றான். பழைய பைத்தியமாக இல்லை அவன்; அவனி

தொடர்ச்சி 12-ம் பக்கம்

'எழுத்தாணி'

கே. பலராமன்; பெங்களூர்.

(?) தான் செய்யும் குற்றங்கள் தெரியாமல் பிறர் மீது குறை கூறிக் கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்களே; அவர்களுக்கு எந்த பழமொழி பொருந்தும்?

"மாமியார் உடைத்தால் மண் சட்டி-மருமகள் உடைத்தால் பொன் சட்டி!"—ஆழ்ந்து சிந்தித்தால் இதற்கு அர்த்தம் விளக்கும்.

சிவம்; திருவாரூர்.

(?) தேர்தலுக்காக திடீர் காங்கிரஸ்காரர்களாக மாறுகிறார்களே; அவர்களை எதிர்ப்பதால் யாருக்கு லாபம்?

ஏழை வோட்டர்களுக்கு!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) கோ. நடராசன்,
7, வாட்கின்ஸன் தெரு,
பெரம்பூர்,
சென்னை-11.

கு-புசாமி; வேளுக்குடி.

(?) கருணாநிதி எழுதும் பூம்புகார் கதையில் புராணக் கலப்பு இருக்குமா?

இருக்காது. பழைய தமிழகத்தின் சிறப்பு இருக்கும்.

ப. சங்கரசேகரன்; அமைந்தகரை.

(?) எழுத்தாணியாரே! உமக்கு எதைப்பற்றி நினைக்கும்போது சிரிப்பு வருகிறது? எதை நினைக்கும்போது அழுகை வருகிறது?

எதிரிகள் நம்மை அழித்துவிடலாம் என்று கனவு காண்கிறார்களே; அதை நினைத்தால் சிரிப்பும்—நம்மினத்தவரே நமக்குக் குழிதோண்டுகிறார்களே; அதை நினைத்தால் அழுகையும் வருகிறது.

ராமச்சந்திரன்; சென்னை-6.

(?) "தேர்தல் என்னும் பாழும் கிணற்றில் தி. மு. கழகம் குதிக்க வேண்டாம்" என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறுவதின் காரணமென்ன?

இது தெரியவில்லையா? சுப்பிரமணியம் போன்ற பாசிகளை எடுத்து, அந்தப் பாழுங் கிணற்றை சுத்தம் செய்து விடுவோமோ என்ற பயந்தான்!

எஸ். பி. மாரியப்பன்; நாகர்கோயில்.

(?) சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற முக்கிய செய்திகள் எவை?

மிருகக்காட்சி சாலையில் வெள்ளைக் காக்காய் இறந்துவிட்டது. அதற்காக கவர்னர் அனுதாபம் தெரிவித்தார். நடைபாதை ஓரத்தில குடியிருக்கும் மனித ஜீவன்கள் சில, மழையிலும் பனியிலும் விரைத்து செத்து விட்டதாகவும் கேள்வி. அவைகளுக்கு அனுதாபம் தெரிவிக்க யாரும் முன் வந்ததாகத் தெரியவில்லை.

தயாநிதி; கும்பகோணம்.

(?) கடவுள் சாவதே இல்லை என்கிறார்களே; உண்மைதானா?

உண்மைதான்—உயிர் இருந்தால் தானே சாக முடியும்!

(?) கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தென்னாட்டு சாந்தி என்று ஆச்சாரியாரை அழைப்பது போல அதையும் தென்னாட்டு கும்பமேளா என்று அழைக்கலாம்.

ந. குருசாமி; மண்டபம்.

(?) ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதிக்கும், ஆலயத்தில் அடைபட்டிருக்கும் கடவுளுக்கும் என்ன வித்தியாசம்?

கைதி, வெளியிலே வாடும் தன்னுடைய குழந்தை குட்டிகளைப் பற்றி நினைக்கிறான். கடவுளுக்கு அம்மாதிரி நினைவுகள் ஏற்பட வழியே இல்லை.

நா. சீனிவாசன்; அத்திப்பாளையம்.

(?) வடநாட்டில் ராவணனைக் கொடும்பாவி கொளுத்தினார்களே; அதுபோல் தென்னாட்டில் ராமனைக் கொளுத்தினால் என்ன?

அப்படி ஒரு காலம் வந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அ. சித்ரா; அண்ணாமலைநகர்.

(?) "காக்கா"ப் பிடித்தல் என்றால் என்ன?

காரியம் ஆவதற்காக,
காலைப் பிடிப்பது!

இதைத்தான் குறுக்கி "கா-கா" பிடிப்பது என்று ஆக்கி விட்டார்கள். அதாவது கணவனே கண் கண்ட தெய்வம், க. க. க. தெய்வம் என்று ஆனது போல!

(?) காணாமலே நட்புக் கொண்டவர்கள் யார்?

பிசிராந்தையும், கோப்பெருஞ் சோழனும்!

சு. சந்தான கிருஷ்ணன்; மதுரை.

(?) பிஞ்சிலே பழுத்த பழம் என்று யாரைக் கூறலாம்?

சைவர்கள் திருஞானசம்பந்தரைக் கூறுவார்கள்; நான் பெரியார் ராமசாமியைத்தான் கூறுவேன். ஏனெனில், திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் போதே அவர் தீண்டாமையை வெறுக்கும் பகுத்தறிவுவாதியாகக் காட்சி அளித்திருக்கிறார்.

(●) கோ. நடராசன்; பெரம்பூர்.

(?) இந்தியாவில், எரிமலை எங்கேயிருக்கிறது?

சென்னை ராயபுரத்தில்!

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

டம் இப்போது அமைதியும் அன்பும் குடிகொண்டிருந்தன.

"அப்பாடா! பிழைத்தான் என் மகன்! பிழைத்தது என் உயிர்!" என்று ஆனந்தப் பெருமூச்சுவிட்டார், மன்னர். அறையை விட்டு வெளியேறினார்.

சற்று நேரத்தில் அரண்மனை மருத்துவர் உள்ளே நுழைந்தார். விஜயன் கண் திறந்து பார்த்தான். "மருத்துவரே! வெற்றி! பெரும் வெற்றி! நம் திட்டம் பலனைத் தந்துவிட்டது!" என்றான் சிரித்துக்கொண்டே.

"ஆம் விஜயா! நாட்டு மக்கள் சிரித்துக் களித்து மகிழ்ந்திருக்கிறார்கள், இன்று!" என்றார் மருத்துவர்.

"மருத்துவரே! அன்று நான் மாட்டுக்காரச் சிறுவனாக மக்கள் மத்தியிலே நடமாடியபோது... அப்பப்பா! அவர்கள் துடித்த துடிப்பென்ன; அனுபவித்த தொல்லைகள் தான் எவ்வளவு? ஆனால் இன்று...! மருத்துவரே, இந்த நாடகத்தின் முக்கிய நடிகர்களான உம்மையும், சோதிடரையும் நான் மறக்கவேமாட்டேன்... என் வெற்றிக்கு..."

"விஜயா! உனக்கு வெற்றியல்ல; தோல்வி! படுதோல்வி!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே ஓடிவந்தார் சோதிடர்.

"தோல்வியா? என்ன சோதிடரே உளருகிறீர்?"—விஜயன் விழி நிறைந்த வியப்புடன் கேட்டான்.

"உளரவில்லை விஜயா! உடனே பொக்கிஷ அறையைப் போய்ப் பார்! புரியும்..." என்றார் சோதிடர்.

மறுகணம் விஜயன் பொக்கிஷ அறையை நோக்கி ஓடினான். அங்கே... "ஐயோ! என் பணம் போச்சே! என் சொத்தெல்லாம் போச்சே! கஜானா காலியாகிப் போச்சே! ஐயோ! போச்சே!... போச்சே!..." என்று புலம்பிக் கொண்டு கீழே புரண்டுகொண்டிருந்தார் மன்னர்.

"காலியான கஜானாவைப் பார்த்ததும் மன்னருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது! என்ன செய்வது?" என்றார் அமைச்சர், தொண்டை நடுங்க!

"ஐயோ!" என்று அலறினான் விஜயன். கண்களைப் பொத்திக் கொண்டான். அரண்மனை உப்பரிகைக்கு ஓடினான்.

★

சோகமே உருவாக உப்பரிகையிலே நின்றுகொண்டிருந்தான் விஜயன். கீழே பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை மக்கள் தெரிந்தார்கள். அவர்களின் முகங்களில்தான் எத்தனை மலர்ச்சி! மகிழ்ச்சி!

விஜயனின் உதடுகள் அசைந்தன "எனக்காக தோல்வி? இல்லை; இல்லவே இல்லை! அதோ, கையிலே பத்து தங்கப் பணங்களுடன் களித்துப் போகும் மக்களைக் கேளுங்கள்! நடந்தது தெரிந்தால் அவர்கள் சொல்லுவார்கள், 'விஜயா—உனக்கே வெற்றி! உனக்கே வெற்றி!' என்று" என்று தனக்குத் தானே பேசினான்.

பொக்கிஷ அறையிலே மன்னனின் புலம்பல்—வெளியிலே மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்—இதற்கிடையில் விஜயனின் இந்தக் குரல் யார் காதிலும் விழவில்லை.

—சொர்ணம்

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

நாட்கள் மறைந்தாலும் நறுமணம் மாறாத தன்மையுள்ள
ஸ்ரீகிருஷ்ணா
பன்னீர்
ரோஸ்வாட்டர்··ஓமவாட்டர்··வினிகர்
கடல்புளிப்பு····சோம்புவாட்டர்
டிஸ்டில்வாட்டர்··ரோஸ்குல்கந்து
118, PORTUGUESE CHURCH ST, MADRAS-1

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
நாடக மன்றத்தினரின் தினசரி நாடக நிகழ்ச்சி.
4--11--55 வெள்ளி முதல் (மூன்று நாட்கள் மட்டும்)

அறிஞர் அண்ணாவின்
சந்திரமோகன்

கட்டணம்: ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, அணா 6.
பெண்கள்: தரை அணா 4.

குறிப்பு: பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6-45 மணிக்கு நடைபெறும். விடுமுறை கிடையாது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.